

மாதுமையம்பாள் சமேத திருக்கோணநாயகர்



# அமரர் செல்லையா நடேசபிள்ளை நினைவு ஏடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/200/0787

உ
சிவமயம்

எமது குடும்பத்தலைவர்

# செல்லையா நடேசபிள்ளை அவர்கள்

24.10.2000ம் திகதி
அமரத்துவம் அடைந்தமை குறித்து
மலரும்
நினைவேடு
22.11.2000

பத்மாவதி நடேசபிள்ளை குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் செல்லையா நடேசபிள்ளை
# நினைவேடு



தோற்றம்
17-03-1918

மறைவு
24-10-2000

## திதி வெண்பா

விண்ணகம் போற்ற வித்தகர் நடேசபிள்ளை
மண்ணகம் விட்டே மறைந்த நாள் - நண்ணுபுகழ்
ஆண்டு விக்கிரம ஐப்பசி அபரபட்ச திரோதையில்
பூண்ட நல் தினமாம் காணீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள்

**தேவாரம் - திருஞானசம்பந்தர் அருளியது**
**திருக்கோணேஸ்வர திருப்பதிகம்.**

நிரைகழ லவரம் சிலம்பொலி யலம்பு
நிமலர் நீறணிதிரு மேனி
வரைகெழு மகளார் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோத நித்திலங் கொழிக்குங்
கோணமாமலை யமர்ந்நதாரே.

**திருவாசகம் - மாணிக்கவாசகர் அருளியது**

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மார்க் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண் டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே!

**திருவிசைப்பா - கண்டராதித்தர் அருளியது**

முத்தியாளர் நான்மறையர் மூவாயிரவர் நின்னொடு
ஒத்தே வாழும் தன்மையாளர் ஓதிய நான் மறையைத்
தெத்தேயன்று வண்டுபாடும் தென்தில்லை யம்பலத்துள்
அத்தாவுன்றன் ஆடல்காண அணைவதும் ஒன்று கொலோ.

**திருப்பல்லாண்டு - சேந்தனார் அருளியது**

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூமனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்
மேருவிடங்க விடைசிப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

**பெரிய புராணம் - சேக்கிழார் அருளியது**

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர் பொழிய கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு வளம்

சீர்வளம் இலங்கைத் தீவதன் கிழக்கே
பாரெல்லாம் புகழும் பக்தன் இராவணன்
தொழுதேத்தி நின்ற விரிசடைக் கடவுள்
விழியொன்று நெற்றியில் விளங்க நிற்பவன்
கோயில் கொண்டிருந்த குவலயந் தன்னை
தாயினும் மேலாம் தலைவனாய்ப் பரிந்து
பாவித்து நின்றதால் பயில் இதிஹாசம்
தனில் இடம் பெற்றுத் தமிழ்ச் சம்பந்தன்
பண்ணோ டிசைத்த பாட்டினில் நிலவி
தேவாரம் பெற்ற தென்கைலை எனக்
குடிதனை நெருக்கிக் குன்றென உயர்ந்து
திருக்கோணமலை யெனத் திக்கெல்லாம் புகழ
வன்னியர் ஆட்சியில் வளம்பல பெருக்கித்
தலையை உயர்த்தித் தருக்கொடு நின்ற
வரலாற்றுப் புகழ் எழிலார் நகரமும்
மகாவலி நீரால் வளம்பல பெருகும்
கொட்டியா புரத்துக் கொழுங்கழி நெல்லும்
குளக்கோட்டு மன்னன் குடைந்த கந்தளாய்
குளத்து நீரால் விளைந்த செந்நெல்லும்
கட்டுக் குளம்பற்றுக் கமத்தினர் கொண்டு வரும்
காயும் கறியும் கதலி மாபலாவும்
வந்தே குவியும் வளமார் நகராம்
திருமலையினுயர் வேளாண் குடியில்
வெற்றிக் கொற்றவை தன்னை வழிபடும்
மரபில் வந்திட்ட வளமார் செல்வன்
செல்லையா தங்கம்மா இல்லற வாழ்வில்
இனிதே யியற்றி இன்புற்றிருக்கையில்
நசேடபிள்ளை நாமமுடையான்
ஆண்டது பதினெட்டு மார்ச் பதினேழில்
பாரினில் வந்து தித்த மகிழ்வைத் தந்தான்
கூடவே பிறந்தனர் நான்கு சகோதரர்
சிவசுப்பிரமணியம், சிவகாமி, மனோன்மணி
தனலட்சுமி என்னும் நால்வர் சோதரராம்
தந்தையின் நிழலில் தமிழோடாங்கிலம்
கற்பதற் கென ஹம்சரின் சீடன்
விவேகானந்தரின் இராமகிருஷ்ண
இந்துக் கல்லூரி தனில் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பவை கற்று கற்றாய்ந் தொழுகி
வாலைக் குமரனாய் வளருங்காலை
கடமையிற் சிறந்து சேவைகள் புரிய
கடற்படைத தளத்தில் வேலைக்குச் சேர்ந்தார்
பெரும் பதவியைப் பெற்ற பின்னரும்
ஆணவமற்று அகந்தையை நீக்கி
எல்லார்க்கும் இனியனாய் எளியனாயாகி
எடுத்த காரியத்தை முடிக்குந் திறனில்
வல்லவனாகி வாழ்ந்திருந்த வேளை
இத்தனை திறமையும் இறவாப் புகழுடன்
இப்படியாக வாழ்ந்த இனிய வேளையில்
இளைஞரான நடேசபிள்ளை யிவரை
இல்லற வாழ்வில் இணைத்திட வெண்ணி
திருக்கோணமலை புகழ் தம்பதிகளான
சங்கரப்பிள்ளை - மரகத மாணிக்கம் ஈன்ற
பலரும் போற்றும் பத்மாவதி நங்கைதனை
ஆண்டது ஐம்பதினாலு ஜனவரி இருபத்தொன்றில்
கடிமணம் செய்வித்து மகிழ்ந்தனர் பெற்றோர்
கண்டவர் வியக்கும் கல்யாண சோடியாய்
களிகொண்டு வாழ்ந்த மங்கல வேளையில்
இல்வாழ்வுக் கிலக்கண மிதுவாமென
ஈன்றனர் மழலைகள் எழுவரைத் தாமே
காலம் கடந்து கனி மழலைகளின்
கல்விக் கென கண்ணும் கருத்துமாய்
ஞாலம் போற்றும் நற்கல்லூரிகளில்
நல்ல கல்வியைப் பெற்றிடச் செய்தார்
ஞானம் நிறைந்த சீலர்களா யாக்கினார்.
இலண்டன் மாநகர் கணக்காளர் சிறிதரன்
கனடா நகர் பொறியியலாளர் சுபதரன்
ஊடக வியலாளர் 'உதயன்' வித்தியாதரன்
டென்மார்க் சசிதரன், கனடா துளசிதரன்
'சுடர்ஒளி' நிறுவன ரவிதரன் என்பாரோடு
யசோதை ஆகியோர் இவரின் பிள்ளைகளாவர்
பிள்ளைகள் இவர்களைப் பேணிக் காத்து
சுற்றம் பெருக தக்க காலத்தில்
உரிய துணைகளாம் மருமக்களை வரித்தார்
இலண்டன் செல்வகலா கனடா அமிழ்தினி
டென்மார்க் உருத்திராங்கனி, இரட்னகலா
'உதயன்' 'சுடர்ஒளி' நிர்வாக இயக்குனர்
சரவணபவன், உமா என்போர் மருக்களாவர்
காலங்கள் கடந்தன, வருடங்கள் ஓடின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிப்போடு பேரக் குழந்தைகள் மலர்ந்தனர்
சிவை, சிவகாமி, சிவப்ரியா, லக்ஷ்மி, விஜயசாயி, வைஷ்ணவி,
அபிராமி, சிவானி, வித்தியசாயி இவர்கள் பேரக்குழந்தைகள்
மழலை களின் இன்பத்தை சுகித்து நின்றவர்
மைத்துனர் இவருக்கு உறவில் அறுவராம்
சரேந்திர நாதன், அருமைநாயகம், யோகராஜா,
நாகேஸ்வரி பரஞ்சோதி, கமலேஸ்வரி துரைராஜா
திருமலை உதயன் பிரின்டர்ஸ் தர்மராஜா
தருகின்ற அன்புறவில் திளைத்து நின்றவர்

எல்லோர்க்கும் இனியராய் எளிமையில் பெரியோராய்
எடுத்த காரியத்தை முடிக்கும் திறமையராய்
வல்லோரையும் மடக்கும் வாய்ச்சாதுரியமாய்
பல்வேறு விதத்தில் பயன்தந்து நின்றார்
பொதுத் தொண்டென்றால் போகிடார் பின்னே
பொறுப்பினை யேற்று முன்னணி வகிப்பார்
முன்னைய பெரியோர் காட்டிய நெறியில்
மகிழ்வுடன் சேவை ஆற்றி மகிழ்ந்தவர்
திருமலை தனிலவர் பெயர் அறியாதார்
ஒருவருமில்லையென அத்தனை சிறப்பு
எட்டுத் தசாப்தம் இவர்கண்ட போதும்
எல்லார்க்கும் இனிய நடேசபிள்ளையாகி
இனிதா யிவ்விதம் வாழ்ந்திடும் சிறப்பை
எண்ணிப் பொறாமை கொள் காலன்
சாவினை யவரிடம் தூது விட்டான்
இதுமுறையோ வென ஏங்கி யலரினர்
இனிதாயமைந்த மனைவி பிள்ளைகள்
சாவினைத் தூற்றி வைத்தனர் மேலும்
கத்திக் கதறி கண்ணீர் சொரிந்தனர்
எண்பத்தி னாலு வருடத்தை வாழ்ந்த
மிலேனியம் ஆண்டு ஒக்டோபர் இருபத்து நாலில்
ஏகினார் இறைவனின் கமல பாதத்தி ல்
ஏகுவோம் ஒரு நாள் நாமும் அவ்வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலிகள்

## மனைவி பத்மாவதி அஞ்சலி

ஐயனே அமுதே எந்தன் அரும்பெறல் நிதியோ
வையத்தில் நீரில்லாமல் வாழ்வதெப்படியே ஐயா
நாற்பத்தி யேழு ஆண்டுகள் நலமாய்க் காத்து
நல்லவழி காட்டி நின்றீரே, ஐயா - இப்போ
பையவே என்னை இந்தப் பாழ் வெளியில் விட்டு
தெய்வமே சென்றதேனோ தீங்கு என்ன செய்தேன்?

## புதல்வர்களின் அஞ்சலி

அன்பின் திருவுருவே
அருளின் நிறைவிடமே
பண்புமிகு தந்தாய்
பாசமெல்லாம் தந்தை
சீலர்களாயெமை யுயர்த்த
சிரமங்கள் பலகொண்டீர்
கண்ணாய் எமைக் காத்திட்ட
கண்மணி அப்பாவே
காலங்கள் எத்தனை கடந்தாலும்
கண்ணீரே எம் அஞ்சலி

## புதல்வியின் அஞ்சலி

அன்பைச் சொரிந்து அருளைச் சுரந்து
அணைத்தே வளர்த்த திருவே
துன்பம் எவர்க்கும் அறவே நினையாத
தூய தந்தையின் உருவே
வலையினில் பட்ட மானாய்த் துடித்து
வாய் விட்டலறும் எனை நீங்கள்
எப்படியப்பா விட்டுச் சென்றீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்களின் அஞ்சலி

பேரும் புகழும் பெருமையும் கொள் சோதரனவன்
சீருடனே வாழுகின்றான் என்ற பெருந்தென்போடு
யாரும் எவரும் எதையும் மதியாது
வீறுடனே வாழ்ந்தோம் வீழ்ந்ததையா வெள்ளிடிதான்
அஞ்சா நெஞ்சத்துடன் அனைவரையும் சமமாக
அணைத்து வாழ்ந்த எம் அன்புச் சோதரா
பஞ்சில் நெருப்பாக பற்றி எரிகின்றோம்
பனி நீரா யணைக்க வருவீரோ சோதரா?

## மருமக்களின் அஞ்சலி

தாயினும் மிக்க பேரன்பு கொண்டென்றும்
தயவுடன் பேணி சாந்தியைத் தந்தீர்
வாயினு மனைத்தும் அன்பு கொண்டெல்லா
வகையிலு முயர்வுற மதித்திட்டீர்
காயினுமினிய கனிமொழியா லெம்மை
கருத்துற வணைக்கும் மெம் மாமா
தீயினில் வெந்து போவது கண்டோம்
செய்வதறியாது திகைத்து நின்றோம்

## மைத்துனர் அஞ்சலி

அத்தான் அத்தான் என்றே
அலறித் துடிக்கும் எமை
பித்தராய் ஆக்கி மனம்
பேதலிக்க வைத்து விட்டு
நித்தியமாய் நித்திரையில்
நீங்கிக் கிடந்ததென்ன?
முத்தான வாய் திறந்து
மொழியீர் ஒரு வார்த்தை

## பேரப்பிள்ளைகள் அஞ்சலி

தோளினிலே தூக்கியெமை
தோதான கதைகள் சொல்லி
தொட்டிலிட்டு உறங்க வைத்தீரே
வாழி நிதம் என்றெம்மை
வகை வகையாய் உணவு தந்து
வாயார வாழ்த்தி வைத்தீரே
நாளிலும் பொழுதிலும்
நம் வாழ்வையே நினைத்தீரே! , இன்று
நம்மை விட்டுப் போனதெங்கே
நாம் கலங்கி நிற்கிறோம் தனிமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர் தர்மராஜனின் அஞ்சலி

என் அருமை மைத்துனர்
என் உயர்ச்சியில் நீர் வைத்த
நிலையான கரிசனையை நான்
என்றுமே மறவேன் மைத்துனா!
இறுதி வரை உம் நோயுடன்
நான் போரிட்டேன், தோற்று விட்டேன்
நீண்டதொரு வரலாறு என்
நீண்ட காற்சட்டைக்கு உண்டு
முதன் முதலில் எனக்கதனை உடுத்தி
அழகு பார்த்ததை மறக்கவே முடியாது
மறக்கவும் மாட்டேன் மைத்துனா
ஒரேயொரு திருப்தி, இறுதிநேரத்தில்
உமக்கு சேவை செய்யக் கிடைத்தது
தந்த உபதேசங்கள் யாவையும்
என்றுமே மறவேன் மைத்துனா!

## உற்றார் உறவினர் அஞ்சலி

கோவில் விழாக் கூட்ட மனைத்திலும் முன் நின்று
கொடுத்த பலசேவைகள் உன் நினைவு சொல்லும்
போகின்ற இடமெல்லாம் புகழ்சேர்க்கும் உன் புன்னகை
புரிந்த உதவிகளை எம்மால் மறக்க முடியுமோ?

## தேற்றம்

நீர்க்குமிழி போலமைந்த வாழ்விதாகும்
நில்லாதே மறைந்தொழியும் மாயமாக
பார்க்குமிடமெல்லாம் வெறும் பகட்டுத் தோற்றமே
பகுத்துணர்ந்து உண்மைதனை யுணர்வீர்
ஆர்க்கும் உபகாரியாம் அவர் நடேசபிள்ளை
அன்புருவாம் பெருமான் தாளுற்றார்
சேர்த்தறங்கள் பல செய்து தெய்வம் பேணி
சிந்தை நிறை கவலை மறந்தே வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

சுவாமி உமாசங்கரானந்தாவின்

# அருளுரை

வாழ்வும், மரணமும் எம்முடன் ஒன்றித்திருப்பன சுகமும், நோயும் எம்மைச் செயற்படுத்தவும், செயற்படாமல் இருக்கவும் செய்வன. இந்நிகழ்வுகளுக்குள் நாம் எல்லோரும் உட்படுதல் இயற்கையின் ஒழுங்கு ஆகும் - எற்பாடாகும்.

இவை அனைத்திற்கும் மேலாகத் தெய்வீகமான இலட்சியம், தூய நோக்கு, புனிதமான பயணம் எம்மை என்றும் உயிர்ப்பித்த வண்ணமே இருக்கும்.

அமரர் திரு. செ. நடேசபிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தம் அடைய இறைவரை இது வேண்டுகின்றது.

அவர்களின் துணைவியார், குழந்தைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தவர்கள் அனைவரும் மன அமைதி பெற இதன் ஆறுதல் வார்த்தையினையும் தெரிவிக்கின்றது.

அன்புள்ள

**உமாசங்கர்**

14.11.2000

19, I.B.C Road,சி.
Colombo -06
Wellawatta

---

# சீரடியால் சிந்தை நிறைந்தவர்

"மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்று கூறிய வள்ளுவர் வாக்கிற்கு இணங்க வாழ்ந்தவர் அமரர் நடேசபிள்ளை. தன்னைத்தானே வருத்தி குற்ற உணர்வுடன் வாழும் மக்கள் அதிகமான இந்நாட்களில் உள அமைதியின் உருவமாய் சொல், செயல் சிந்தனைகளால் பிறருக்குத் தீங்கோ, அமைதியின்மையோ ஏற்படுத்தாமல், ஏற்படாமல் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய உயர்குணம் படைத்த அமரர் நடேசபிள்ளைக்கு சொர்க்க வாசல் திறந்திருந்தது என்று கூறினால் அதை நம்ப மறுக்க காரணம் எதுவும் இல்லை.

சீரடியால் சிந்தை நிறைந்த அவருக்கு சத்யசாயியின் தரிசனமும், அனுசரணையும் கிடைத்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை.

அன்பான மனைவி, அருமையான பிள்ளைகள், ஆற்றல் மிக்க மருமகன் அனைவரின் அரவணைப்பிலிருந்து விடுபட ஏற்பட்ட கடைசிக் கால வருத்தம் அதன் குறியை நிறைவேற்றியது என்றே கூற வேண்டும்.

சாதகத்தில் குறித்த நாளைக் கடந்தும் சுடர்ஒளி வெளிவர துணைபுரிந்தது போல் சாவிலும் பிறருக்குக் கஷ்டத்தைத் தாரது நிறை வாழ்வு வாழ்ந்து விண்ணகம் எய்திய அமரரின் ஆத்மா குடும்பம், சுற்றம், அனைவருக்கும் ஆசி வழங்க விழையும் மருமகனின் அஞ்சலி

**- ராமர் -**

52, பிரதான வீதி
திருகோணமலை
14.11.2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்தாசன்

உலகில் மானிடப்பிறவி எடுத்த பயனை சமய கோட்பாட்டின் வழியிலும் பக்தி, ஒழுக்கம், இறைபக்தி, தருமசிந்தை , அகிம்சை என்ற உணர்வில் இப்பூவுலகில் வாழ்வது நாம் செய்த தவத்தின் பெருமையால்தான் அமையலாம். அதன்படி அமரர் நடேசபிள்ளை அவர்கள் காஞ்சிமடப்பெரியாரின் நிறைவு பெற்ற பக்தனாகவும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு காஞ்சிபுரத்திலிருந்தே ஸ்ரீ மகா மேருயந்திரத்தை பெரியவரின் ஆசியுடன் எடுத்து வந்து ஸ்தாபித்து கும்பாபிஷேகம் செய்து அம்பாள் வழிபாட்டின் பெருமையை உணர்ந்த தவஞானியாகவும் தமது குடும்ப வாழ்க்கையை சீரும் சிறப்புடன் நடத்தியும் பல யாத்திரைகள். தீர்த்த ஸ்நானம் செய்தும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் மேல் அளவு கடந்த பக்தி உணர்வும் கொண்ட நிலையிலும் வாழ்ந்து வந்த உத்தமர்.

அவர் எந்நேரமும் அம்பிகையின் மூச்சாகவே வாழ்ந்த பக்திமான். 'பக்தியால் யான் உனைப் பலகாலும்' என்ற அருணகிரியாரின் உபதேசத்தை மனதில் பதித்து வாழ்ந்த உத்தமர்.

அன்னாருடைய சிறப்பு வாழ்வை நாடி மக்கள், மருமக்கள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் பிரார்த்தனை செய்து நல்வாழ்வு பெறுவார்களாக! அன்னாரின் மறைவு அவரது குடும்ப பிள்ளைகள் சுற்றத்தவர், நண்பர்கள், அனைவருக்கும் பெரும் துன்பமான நிலையாகும். எனவே இம்மண்ணில் பிறந்தார் விண்ணுலகு எய்துவது இயற்கையே. இதனால் மனங்கலங்காது அவரின் சுத்த ஆன்மா பரிபூரணத்துவ சிவசாயுத்திய பதவி பெறவேண்டிப் பிரார்த்தனை செய்து எமது மனத்தை சாந்தப்படுத்துவதோடு அமைதியாகப் பிரார்த்தனை செய்வோமாக!

*ஓம் சாந்தி! சாந்தி சாந்தி!*

*காளிஅம்பாள் பாதமலர் துணை*

*சுபமங்களம்.*

பிரம்மஸ்ரீ. சாமி. விஸ்வநாதக்குருக்கள்
(நவாலியூர் கொழும்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பகதரு நடேசபிள்ளை

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என் பதை வாழ்ந்து காட்டிய வள்ளல் அமரர் செல் லையா நடேசபிள்ளை அவர்கள்.

அன்பருக்கு அன்பனாய் அடியார்க்கு அடி யனாய் எண்பத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்து,

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப்படும்'

என்னும் வள்ளுவருடைய வாசகத்தை மெய்ப்பிப்பது போல அமரராகிவிட்டார். அன் னாருடைய ஆத்மா சாந்தியடையவும் மனைவி, மக்கள், மருமக்கள், சுற்றத்தார் யாவரும் மன அமைதியடையவும் எல்லாம் வல்ல அம்பிகை ஸ்ரீ பத்திரகாளித் தாயாரின் பொன்னான திரு வடிகளை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

ஒரு மரமானது செழித்து வளர்ந்து கிளைத் துப் பூத்துக் காய்த்துப் பழுத்த நறுங்கனிகளைத் தன்னலங் கருதாமல் பிறர் நலனுக்காக வழங்கு வது போல அமரர் நடேசபிள்ளை அவர்களும் வாழ்ந்து கொண்டிருந்த கற்பகதரு.

அன்னாருடைய உள்ளத்தில் சுரந்த அன்பி னாலும் கருணையினாலும் இரக்கத்தினாலும் ஈகையினாலும் அளப்பரிய பொதுப்பணிகள் நிகழ்ந்தன. அப்பணிகளுக்கு ஆக்கமும் ஊக்க மும் அளிக்கும் அவருடைய தியாக வாழ்க்கை அறத்தாறிதுவெனக் காட்டி அவரை அருளாளனாக்கியது. அருள் கனிந்த உள்ளத்தோடு அமரருல காளச் சென்றுவிட்டார்.

அமரர் செல்லையா நடேசபிள்ளை அவர் கள் நீண்ட நெடுங்காலமாக எங்கள் குடும்ப அங் கத்தவர் போல வாழ்ந்தவர். ஸ்ரீ பத்திரகாளி அம் பாளுடைய அளப்பரிய கருணையினால் ஆட் கொள்ளப்பட்டுத் தமது குடும்பத்தையே அம்பி கையின் அடியவராய் பக்தர்களாய்த் தாசர்க ளாக்கிவிட்டதை யாமறிவோம்.

அடக்கமும் அமைதியும் ஆழ்ந்த சிந்தனை யும் அன்பும் நிறைந்தவராய் அறப்பணி செய் யும் அருளாளனாய் வாழ்ந்த சான்றோனாகிய நடேசபிள்ளையை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சம் நெகிழ்கின்றது.

இனிய கனிகளைத் தரும் மரத்துக்கு மண்ணில் மறைந்திருந்து ஊட்டமளிக்கும் வேர் போல வாழ்ந்த அமரர் நடேசபிள்ளை அவர்கள் விண்ணில் நிறைந்திருக்கும் தெய்வீக வாழ்க் கையை அனுபவிப்பதற்காக அமரராகிவிட் டார். அன்னாருடைய ஆத்மா சாந்தியடைவ தாக.

*வேதாகம மாமணி*
*பிரம்ம ஸ்ரீ ரவிச்சந்திரக் குருக்கள்*

*ஆதீன கர்த்தா*
*ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்*
*திருகோணமலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருமால் துணை

# இறப்பு ஒரு நாள் இறந்திட வேண்டும்

மனத்துக்கண் மாசிலனாக வாழ்ந்த , மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்த, ஐயா நடேசபிள்ளை அவர்களின் பிரிவாற்றாது சிந்திய கவிதைத் துளிகள்.

வாழ்கை என்பதோர் மூடன் கதை
அது வாழ்ந்து முடித்தவன் சொன்ன கதை
உண்மை அதிலே பலவுண்டு
ஊன்றி உணர்ந்தால் கசப்புண்டு
வாழ்க்கை என்பது சுவையாகும்
அது வாழும் விதத்தில் ஒளி வீசும்
வாழ்க்கை என்பது சுமையாகும்
அது வாழும் மனிதனின் சுயநலத்தால்
மறையும்; மறையாத மாந்தருண்டு
அவர் ஆற்றிய பணிகளில் வாழ்வதுண்டு
வாழ்வின் உண்மை அறமாகும்
அது வற்றா நதியின் திறனாகும்
எண்ணமும் செயலும் இனிதாக
நலிந்தவர் வாழ்வு நலமாக
ஆற்றும் பணிகள் பலவாக
ஆறிரு தடந்தோள் பலமாக
தூய மனமே துணையாக
தொண்டில் உயர்ந்த வாழ்வாக
வாழ்வது ஒன்றே வாழ்வாகும்
இதுதான் வாழ்வு இதுதான் நியதி என்றுணர்ந்தே
தீதகல் வாழ்வில் நடேசபிள்ளை தழைத்து உயர்ந்தார்
இன் சொற் பயின்று இன்முகம் காட்டி
அனைவரையும் அன்பால் பிணைத்து
அரும்பணி புரிந்து அகமகிழ்ந்தார்
இறப்பும் பிறப்பும் உலகின் இயற்கை என்றுரைத்தால்
இறப்பு ஒரு நாள் இறந்திட வேண்டுமென்றுரைப்பேன்
அறமெனும் சிற்பி செதுக்கிய வாழ்வும் அழிந்திடுமோ
இறவாப் புகழின் ஒளிக் கீற்றென்றும் நிலைத்திடுமே!

*அன்னாரின் ஆன்ம அமைதிக்காக மாலவன் தாள் பணிந்திடும்*

அடையாறு
சென்னை

**க. சி. சிவசுப்பிரமணியம்**
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது அன்புக் கணவர்

அவருடன் வாழ்ந்த 47 வருடங்களையும் நினைவில் மீட்டுப் பார்க்கிறேன்.

ஒரு குறையையாவது அவர் வைத்தாரா? இல்லை.

குறையாத அன்பையும் நிறைந்த வாழ்வையுமே எனக்கு அளித்தார்.

அப்படிப்பட்ட ஓர் உத்தமசீலரைக் கணவராகப் பெற்ற நான் பாக்கியசாலி.

பதினாறு வயது இளமங்கையாக அவருடன் இல்லறம் புகுந்த நாளில் இருந்து என்னை ஒரு குழந்தையாகவே பாவித்து எனது தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்தார்.

அந்தக் கடனைத் தீர்க்கத்தானே கடைசி இரண்டு மாதங்களாக விதி அவரைக் குழந்தையாகவும் என்னைத் தாயாகவும் மாற்றி விட்டது!

தன் குடும்பத்தோடு நின்று விடாமல் நெருங்கிய உறவுகளுக்கும் கை கொடுத்த என் நல்லவர் கை வழங்காமல் என் கையை எதிர்பார்த்து நின்ற வேதனையைத் தாங்க முடியவில்லையே!

வாழ்க்கைத் துணையாக வந்தவர் இடையில் போய்விட்ட துன்பம் என்னைச் சுட்டாலும் அழியாத அவரது ஆன்மா என்றும் என்னுடன் நிற்கும் என்பதில் தேறுகின்றேன்.

**-பத்மாவதி நடேசபிள்ளை.**

# வழிகாட்டுவார் தந்தை

தந்தைக்குத் தலைமகனாய் பிறந்தேன். இத் தரணியில் என்னைத் தலை நிமிர வைத்தார் தந்தை. அவருக்காக எந்த நேரத்திலும் ஓடோடி வர முடிந்த என்னால் இந்த நேரத்தில் வர முடியாமல் விதி சதி செய்து விட்டதே! என் அருமைத் தந்தையின் முகத்தைக் கூட கடைசியில் பார்க்கக் கொடுத்து வைக்காமல் போய் விட்டதே! பதினெட்டு வயதில் தந்தையுடன் குடும்பக் கடமைகளை ஏற்றுக் கொண்டேன். தந்தைக்கான இந்தக் கடைசிக் கடமையை முடிக்க முடியாமல் போய்விட்டதே!

அன்பு வழி நடந்த என் தந்தையின் தூய ஆன்மா பரமாத்மாவுடன் ஒன்றிக் கலந்து விட்டது. இனி அவருக்கு இடம், பொருள், நேரம் என்ற வேறுபாடே இல்லை. இனி என்றும் என் அருகில் இருப்பார். எனக்கும் குடும்பத்துக்கும் வழிகாட்டுவார் தந்தை என்பதில் தேறுதல் அடைகின்றேன்.

மூத்தமகன்

சிறிதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NADESAPILLAI ANNA

Late Mr. Nadesapillai was a schoolmate of my eldest brother. He was always regarded with affection as a member of my family. Whenever my parents had to take important decisions, they always sought Mr. Nadesapillai for advice and guidance.

I called Mr. Nadesapillai as Anna not merely because he was elder to me but also because I was genuinely conscious of the care and regard he had towards us. He was soft spoken and kind. Above all he radiated wisdom and a high sense of responsibility. It was inevitable that I looked to him for advice which was always sound.

In the early days of my career in the legal profession, he made it a point to find the time to see me conducting my cases both in Jaffna and in Colombo. Whenever, I appeared in the Courts of Jaffna, he was familiar figure who sat at the back of the court carefully following the proceedings. Though he was not a lawyer, he appreciated the legal principles and never hesitated to discuss the cases with me. He was a tower of strength to me in those days.

Mr.Nadesapillai was a man of God. A devout Hindu he was constantly engaged in religious activities. I am personally aware and have seen the extent of his generosity, particularly, in feeding the poor and assisting the needy. He lived a full life with dignity having done no harm to others.

*K.C.Kamalasabayson*

*Attorney General.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தும் வாசிப்பும் அவர் வழியாய்க் கிடைத்த பிச்சை!

அமைதியான வசீகரமான தோற்றம்; புன் னகை தவழும் முகம்; ஆரவாரமில்லாமல் அடக் கத்தோடு உறவாடும் பண்பு; இனிமையான சுபா வம்; சினத்துடன் வருவோரையும் சிரித்த முகத் துடன் வரவேற்கும் அன்புரிமை; நிறைகுடம் போன்று ஆழ்ந்த அறிவு; துன்பத்தையும் அமை தியோடு ஏற்கும் மனத்திடம்; சுகத்தையும் துக்கத் தையும் ஒன்று போலவே எதிர்கொள்ளும் மனப் பக்குவம்; அதிர்ந்து பேசியே அறியாத சாந்தம் - இவற்றின் வடிவமே எங்கள் அப்பா.

சுருங்கக் கூறின் அவர் வஞ்சமில்லா நெஞ் சினர்.

'தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்'என்ற வள்ளுவர் வாக்கை மெய்ப்பித்து எங்கள் ஒவ்வொருவரை யும் அவையத்து முந்தியிருக்க வைத்த வழி காட்டி அவர்.

எனக்கு நினைவு தெரிந்த என் சிறுபராயத் திலே என்னைத் தன் தோளில் தூக்கிப்போட்டு 'ரகுபதிராகவ ராஜாராம்' என்ற - காந்தி மகானுக்குப் பிடித்தமான - பாடல் வரிகளை மெல்லிய குரலிலே பாடியவாறு என்னைத் தூங்க வைத்த நாள் முதல், எங்களைவிட்டுப் பிரியும்வரை சினந்தே அறியாத எங்கள் அப் பாவைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கிறேன்; நெஞ் சுருகுகின்றது.

'அம்புலி மாமா' தொடக்கம் 'ஆனந்த விக டன்' வரை 'Bhavans Journal' முதல் 'Readers Digest' வரை சகல பத்திரிகைகளையும், சஞ்சி கைகளையும் வாங்கிக் குவித்து வீட்டையே ஒரு நூலகமாக்கித் தன் வழியில் எங்களையும் வாசிக் கும் பழக்கத்துக்கு ஆட்படுத்திய அவரின் தூர திருஷ்டியை எண்ணிப்பார்க்கிறேன். அவர் அன்று போட்ட அடித்தளம் - அத்தியாயம் - இன்று தமிழ்ப் பத்திரிகைத் துறையில் ஒரு சில அடிகளையேனும் நான் எடுத்து வைக்க எனக்கு வழிகாட்டியிருக்கின்றது.

மது, புகைத்தல், போன்ற போதைப் பொருள்களைத் தொட்டுக்கூட பார்க்கக்கூடாது என்ற வைராக்கியத்தை எங்களின் மனதில் பசு மரத்தாணியாய்ப் பதிக்கும் வகையில் முன் மாதி ரியாய் நடந்து, அதன் வழியே எங்களை வழி நடத்தியவர் அப்பா.

கிடைத்தற்கரிய சட்டக் கல்லூரி எனக்குக் கிட்டியபோது உளம் மகிழ்ந்த அவர், அக்கல் வியை அரைக்கிணறு தாண்டிய நிலையில் பத்தி ரிகைத்துறைப் போதையில் மூழ்கி இடைநடு வில் நான் கைவிட்டபோது, பெரிதும் மனம் நொந்து போனார். மறையும் வரை அவரது மன தைப் புண்ணாய் அரித்துக் கொண்டிருந்த ஒரு விஷயம் இது.

என்றாலும் கூட -

நீண்ட பல வருடங்கள் பரீட்சைக்குத் தோற் றாமல் தேசிய மாவட்ட மட்டங்களில் பல்வேறு விளையாட்டுக்களில் என்னை ஈடுபடுத்தி முழு விளையாட்டு வீரனாகவே நான் காலம் கழித்த போதும் சரி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டக் கல்லூரிக் கல்வியை நான் இடையில் கைவிட்டபோதும் சரி -

அவர் என்னைக் கடிந்து கொண்டதே இல்லை.

பிறரை வருத்தாத - மற்றவர் மனதை நோக டிக்கத் தெரியாத - நோகடிக்க விரும்பாத - தம் பண்புக்கு ஏற்ப ஒரு நண்பனுக்குரிய நெருக்கத் தோடு, தந்தைக்குரிய பாசத்தோடு, ஒரு வழிகாட் டிக்குரிய விசுவாசத்தோடு எனக்குப் புத்தி சொல் லியதைத் தவிர அவர் கடிந்து கொண்டதே கிடை யாது.

எழுத்தும் வாசிப்பும் அவர் வழியாய் எனக் குக் கிடைத்த பிச்சை.

மணி, மணியாக அச்சுப்போல அழகிய எழுத்தில் ஆற்றோட்டமான ஆங்கிலத்தில் அவர் எழுதுவதைப் பார்த்து கற்றவர்கள் கூட ஆச்சரியப்படுவார்கள். அவரது இறுதிக் காலம் வரை அவரது அழகிய எழுத்துக்கள் தடுமாற வேயில்லை. ஆங்கிலத்தில் கல்வி கற்ற அவ ரால் மணிப் பிரவாகம் போன்று எளிமையான தமிழில் எழுத முடிந்தது என்றால் அதற்குக் கார ணம் அவரது ஆழ்ந்த வாசிப்புப் பழக்கம்தான்.

இந்து சமய விவகாரங்கள் முதல் தர்க்க சாஸ்திரங்கள் வரை - அரசியல் முதல் சமஸ்கிரு தம் வரை - தமிழ் இலக்கியங்கள் முதல் இலக் கணங்கள் வரை - அவர் அறிவு முதிர்ச்சி பெறாத துறையே இல்லை. என்றாலும் கூட பல ரின் மத்தியிலும் எதுவும் தெரியாதவர் போல அமைதி பேணுவார். அத்துணை எளிமை மிக் கவர். ஆற அமர அவரோடு உரையாடுவோர், நெருங்கிய நண்பர்கள், அவர் மனம் திறந்து பேசுவோருக்கே அவரது அறிவின் ஆழமும் புலமையும் ஓரளவு தெரியும்.

தன் உணர்ச்சிகளை, உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, பிறரின் உணர்ச்சிகளுக்கு மதிப் பளித்து, சீற்றமும் சினமும் கொள்ளாது இல்ல றத்தையே நல்லறமாகக் கொண்டு வாழ்ந்து காட் டிய யோகி அவர்.குடும்ப விவகாரங்களில் கூட அவர் எடுக் கும் முடிவுகள் , தீர்மானங்கள் குடும்ப அங்கத்த வர்களின் தனி மனித விருப்பங்களுக்கும், சுதந் திரத்துக்கும் மதிப்பளிப்பவையாகவே எப் போதும் அமைந்திருந்தன.

குடும்பத்திலும் சரி, சமூகத்திலும் சரி அவ ருக்கு யாருடனும் பிணக்கு ஏற்படுவதில்லை. இரண்டு கைகள் தட்டிக்கொண்டால் தானே ஓசை வரும்?

வாழ்நாள் முழுவதும் தன்னால் இயன்றதை சமூகத்துக்கு வழங்கிய பரோபகாரி எம் தந்தை.

அவர் காளி பக்தர்; பாபா தாசர். இறைவ னின் திருவடியில் அவருக்கு நித்தியப் பெரு வாழ்வு கிட்டியதே அவரது பிரிவுக்கு மத்தியி லும் எமக்குக் கிடைக்கும் ஆறுதலாகும்.

*ந. வித்தியாதரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தைக்கு ஒரு மடல்

அன்பு அப்பாவிற்கு

முதல் தடவையாக அம்மாவை விளிக்காமல் உங்களுக்கு மட்டும் ஒரு கடிதம் எழுதுகிறேன்.

மற்றவர்களைவிட கூடியகாலம், உங்களுக்கு அருகில் இருக்கும் பாக்கியத்தை அம்பாள் எங்களுக்கு அருளியிருக்கின்றாள். இதனால் நாங்கள் உங்களுடைய ஆசியையும், அன்பையும், அறிவுரைகளையும் நிறையப் பெற்றிருக்கிறோம். நாங்கள் பாக்கியசாலிகள்.

உங்களுடைய கடைசிக் காலத்தில் என்னை உங்கள் பக்கத்தில் இருத்திவைத்து, நிறைய விஷயங்களை எனக்குச் சொல்லித் தந்தீர்கள்.

நான் எப்போதும் உங்களைப் பார்த்து வியப்பதுண்டு. எப்படி உங்களால் கோபப்படாமல் இருக்க முடிகிறது? எல்லோரையும் நல்லவர்களாகவே நினைக்க முடிகிறது? யாருடைய மனமும் புண்படக்கூடாது என்பதில் தீர்க்கமாக இருக்க முடிகிறது?

சிலவேளைகளில், எனக்குப் பிரச்சினைகள் வரும்போது கடவுளை ஏசி, சலிப்பதுண்டு. அப்போது, நீங்கள் சொல்வீர்கள் :- ''தங்கச்சி, கடவுள் மீது பக்தியும், கடவுளுக்கு பயந்தும் நடப்பவர்களுக்குத்தான் துன்பமும் துயரமும் தொடர்ந்து வருவதைப் பார்க்கலாம். இதிலுள்ள உண்மை என்னவென்றால் நல்லவர்கள், தங்களுக்குக் கடுமையான நெருக்குதல் ஏற்படும் போதும், தங்கள் கொள்கையிலிருந்து இம்மியளவும் மாறாமல், துன்பங்களையும், துயரங்களையும், இன்முகத்துடன் வரவேற்று, முடிவில் தங்கள் மனோபலத்தாலும், கடவுள் அருளாலும் தங்கள் குறிக்கோளை அடைந்துவிடுகிறார்கள்'' - இப்படிச் சொல்வது என் காதில் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

அப்பா, நீங்கள் நிறைய விஷயங்களை நடைமுறையில் நடந்து காட்டியிருக்கிறீர்கள்.

நீங்கள் நோயுற்றபோது, அம்மா உங்களுக்கு செய்த சேவைகளைப் பார்த்து, எனது கணவர் என்னிடம் ''நீ இப்படி என்னை பார்ப்பாயா?'' எனப் பல தடவைகள் கேட்டதுண்டு. இல்லறத்தில் இருக்கும் கடமைகளை நீங்கள் வாழ்ந்து காட்டியிருக்கிறீர்கள்.

நீங்கள், எங்கள் அம்மாவையும், எங்களையும் எவ்வளவு நேசித்தீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அப்பா, நீங்கள் வெளியில் எந்த உணர்ச்சிகளையும் காட்டிக் கொள்வதில்லை. வெகு சாதாரணமாகவே சொல்வீர்கள் : ''உனது கணவர் நல்ல பிள்ளை. அவரை கவனமாகப் பார்த்துக் கொள்- அவருக்கு வேலைப் பளு கூட'' - என்பீர்கள். பின், ''அடுத்த சந்ததிக்கு - லக்ஷ்மியின் நடத்தை முன் உதாரணமாக இருக்க வேண்டும். நல்லதை சொல்லி வளர். மற்றவர்கள் அதை பின் தொடர்வார்கள். யாரையும் வித்தியாசப்படுத்தி பார்க்கக் கூடாது'' என்பீர்கள். சோமஸ்கந்த ஐயாவிடமும், சந்திரன் ஐயாவிடமும் உங்கள் பெற்றோர், சகோதர சகோதரிகள், அவர்களின் பிள்ளைகள் - முக்கியமாக வரத அத்தான், குட்டி மாமாபோன்றோரிடம் உங்களுக்குப் பாசம் அதிகம். அவர்களைப் பற்றி பேசும்போது முகம் தனியாகப் பிரகாசமடைவதை உணர்ந்திருக்கிறேன்.

அம்பாள், எங்கள் வீட்டில் ஒருவரைப் போலவும், காளிகோவில் - எங்கள் வீடு போலவும் உரிமையுடன் பேசுவீர்கள் - கதைகள் சொல்வீர்கள்; இதனால் எங்களுக்குள்ளும் அப்படி ஓர் எண்ணம் பதிந்துவிட்டது. அம்பாளை எங்களுக்கு அண்மிக்க வைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியம் உங்களையே சாரும் அப்பா. உங்கள் மூலம் நாங்கள் அந்த பேறைப் பெற்றோம்.

உங்கள் பிரிவு எங்களுக்கு மிகவும் கஷ்டமானது. நீங்கள் காட்டியவழி வெகு பெறுமதியானது.

என் வாழ்க்கையில் சந்தித்த ஒருவர் கூட உங்களைப்பற்றி கோபமாகவோ, குறையாகவோ கதைத்ததை நான் கேட்டதில்லை.

தானும் கோபப்படாமல், மற்றவர்களையும் கோபப்படுத்தாமல் வாழ்வது மிகவும் கஷ்டமானது. எப்படி நீங்கள் இதைச் சாதித்தீர்கள்?

உங்களை நினைத்தாலோ, ''எங்களை சரியான பாதையில் வழிநடத்துங்கள்'' என்றே வாய் உச்சரிக்கின்றது. நீங்கள் நல்ல முன்னோடி வழிகாட்டி.

*உங்கள் பாதங்களைப் பணிந்து விடைபெறும்*

அன்பு மகள்,

**யசோதை சரவணபவன்**

---

# அஞ்சலி செய்கிறோம்

அமரர் செல்லையா நடேசபிள்ளை ஐயா அவர்கள் மண்ணாண்ட காலத்தையும், விண் ணாளும் காலத்தையும் நினைந்து நினைந்து அஞ்சலி செய்கிறோம்.

பூதவுடலை விட்டுப் புகழுடம்போடு சென்று விண்ணாளும் நடேசபிள்ளை ஐயா அவர்களின் உயிர் அழியவில்லை. அழிவற்ற உயிருக்கு அஞ்சலி செய்கின்றது திருகோண மலைச் சக்தி நிலையம்.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுடைய அருளி னால் மக்களுக்கு அறிவூட்டும் நூலகமாயிருந்த போதிலும் அம்பாளுடைய திருவடிவை நினைந்து தொண்டாற்றும் அடியவர்களைக் கொண்ட சக்தி நிலைய தாசர்களில் ஒருவ ராயிருந்து, எமக்கு அறிவுரை கூறி, அறநெறி காட்டி ஆதரித்தவர் அமரர் செல்லையா நடேச பிள்ளை ஐயா அவர்கள். அன்னாருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க்கை என்பது அவரவருடைய கையி லேதான் இருக்கின்றது. அமரர் நடேசபிள்ளை ஐயா அவர்கள் தன் காலிலே நின்று தன் கைக ளால் அறப்பணியாற்றிய பெரியார். வலது கை வழங்குவதை இடது கை அறியாமல் வாழ்ந்த வருக்கு வாய்த்த மனைவியும் , பிள்ளைகளும், மருமக்களும் தடாதகை உடையவர்களாய் வாழ்ந்த குடும்பமாதலால் இந்நாட்டில் அள வற்ற அறப்பணிகள் நடந்தன.

அன்பு நெஞ்சமும், அளவற்ற அருளும், பண்பும், பக்தியும் பத்திரகாளித் தாயாரின் பாதமே தஞ்சமென வாழும் உறுதியும், நன் மக் கட்பேறும், அழிவுறும் செல்வத்தை அழியாமல் காக்கின்ற அறக்கொடையும், ஆதரவற்றோரை அணைத்து ஆதரிக்கும் பெருமனமும் படைத்த செல்லையா நடேசபிள்ளை அவர் கள் அனித்தியம் என்னும் ஞானநிலை அடைந்த தால் ஞாலத்தை விடுத்து அமரலோகத்தை ஆள்வதற்குச் சென்றுவிட்டார்.

அன்னாருடைய ஆத்மா சாந்தியடைவதற் காக அனைவரும் பிரார்த்திப்போமாக.

*திருகோணமலை*

*சக்தி நிலை அமைப்பாளர்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகைவரையும் நண்பராக்கும் சுபாவம்

**வி**சாலமான நெற்றி, மேவி இழுத்த தலை, கிளிச்செண்டு போன்ற மூக்கு, மாநிறம், சுமார் 5 அடி உயரம், வெள்ளை நிற முழுக்கை சேட், வெள்ளைக் கால்சட்டை, தோதான நிற ரை(Tie) பிறவுன் (Brown) நிற பளிச்சிடும் சப்பாத்து. அதே நிற மொத்த பிறீவ் கேஸ் (Brief Case) ஆகியவற்றுடன் நாள்தோறும் காலை 7.30 மணிக்குA30 ஒஸ்ரன் (Austin) காரில் புறப்படும் உருவம் நான்அன்று கண்ட காட்சி.



அமரர் நடேசபிள்ளை தம்பதிகளுடன் கட்டுரையாளர்

எட்டு முழ தூய்மையான வெள்ளை, வேட்டி. சில சமயங்களில் சேட்டும் அணிந்த தோற்றமுடைய உருவம் நான் அன்று கண்ட காலை மாலைக் காட்சி.

இவைதான் என் மனக்கண்ணில் பதிந்த திரு. நடேசபிள்ளையின் அன்றைய புறத்தோற்றம். கூர்மையான, விசாலமான, ஆழமான தமிழ், ஆங்கில மொழிகளின் அறிவும், சமயப் பற்றும் சோதிடவியல் விஞ்ஞான பூர்வமான தெளிவும், இவற்றின் பிரதிபலிப்பான இன்சொல், பகைவர்களை நண்பர்களாக்கும் சுபாவம் ஆகியவை அவரின் அகவளக் கோலங்களாக அமைந்திருந்தன.

இவ்வாறான புற, அக வடிவத்தைக் கொண்ட திரு.நடேசபிள்ளையின் அறிமுகம்,உறவு பின் உருவான குடும்பப் பிணைப்பு, அவரின் சிறிய தாய் முறையான திருமதி வேலுப்பிள்ளை தெய்வானைப் பிள்ளையின் இலக்கம் 20, 11ஆம் ஒழுங்கை, கொட்டாஞ்சேனையில் உள்ள வீட்டில் நானும் அவரும் வாழ்ந்த காலமான 1959 பிற்பகுதியில் ஆரம்பமானது.

அவரிடத்தில் நான் கண்ட சிறந்த பண்புகளுள் நியாய சிந்தை, திறந்த மனம், நம்பகத் தன்மை, அவரின் உறவினரை என் பங்காளியாகத் தூண்டியது மட்டுமல்ல, அவரிடமே என் எண்ணத்தை முதலில் வெளிப்படுத்தி அவரின் ஆலோசனையைப் பெறவும் காரணமாக அமைந்தது.

அவர் எனக்கு வழங்கிய பக்கச் சார்பற்ற தகவல், வழிகாட்டல் எனக்குச் சிந்தனைத் தெளிவை ஏற்படுத்தியதோடு எண்ணத்தை மன உறுதியோடு செயற்படுத்த உதவியது. அவர் ஊடாக உருவாகிய உறவு அவரின் சிறிய தாயாகிய திருமதி. வே.தெய்வானைப்பிள்ளை, சிறியதாயின் பிள்ளைகள் காலஞ்சென்ற செல்லையா, இலட்சுமிப்பிள்ளை, வல்லிபுரம், மருமகளான திருமதி பாக்கியம் வல்லிபுரம் ஆகியோர் என்னைத் தங்கள் மூத்த பிள்ளையாகக் கருதி மதித்தனர். திரு வல்லிபுரத்தின் பிள்ளைகளான அருந்தவராசா, மகேஸ்வரி, பரமேஸ்வரி, வில்வராணி, தர்மராசா, இந்திராணி, புஸ்பராணி, கமலேஸ்வரி, சிவகுமார், ஆகியோர் என்னையும் மனைவியையும் தங்கள் பெற்றோர் போல் மதிக்கும் அளவுக்கு இட்டுச் சென்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தி. நடேசபிள்ளை ஊடாக ஆரம்பமான உறவு அவரின் சகோதரர்களான காலஞ்சென்ற திருமதி சிவகாமியம்மா செல்வரத்தினம், திரு.சிவசுப்பிரமணியம், திருமதி. அழகம்மா வேதநாயகம், அவரின் எஞ்சியுள்ள சகோதரி திருமதி தனலட்சுமி சண்முகராசா ஆகியோரின் உறவு எனது திருமணத்துடன் உயர் நிலையை அடைந்தது. அவரின் அடுத்த சந்ததியைச் சேர்ந்த திரு.வே.வரதசுந்தரம், திருமதி கமலலோஜினி ஜெயச்சந்திரன், திரு.இ. இராமச்சந்திரன், திருமதி. வில்வராணி வரதசுந்தரம், திரு. இ. நரேந்திரன் திரு.சி.பாலேந்திரன், திரு.ச. சிவஞானசுந்தரம் ஆகியோர் எமது குடும்பத்தினர் பால் காட்டும் கரிசனை, அன்பு, மதிப்பு ஆகியவை அவர் ஊடாக ஆரம்பமாகி விருத்தி செய்யப்பட்ட நல்லுறவின் சான்றே.

எனது வாழ்க்கை வரலாற்றிலிருந்து எவ்வளவிற்கு திரு.நடேசபிள்ளையின் குடும்பம் பிரிக்க முடியாதோ அதிலும் பார்க்கக் கூடுதலாக திரு.நடேசபிள்ளையின் குடும்ப வரலாறு அவரின் சகோதரர்களின் குடும்ப வரலாறுகளிலிருந்து பிரிக்க முடியாதது என்பது என் அனுபவத்தின் ஊடான கணிப்பு.

எனது திருமணத்தை முன்னின்று நடத்தியவர் திரு., திருமதி நடேசபிள்ளை ஆவர். எனது அனுபவக் குறைவால் உறவினருடன் ஏற்பட்ட சிறு சிறு தகராறுகளை தீர்க்க வழிகாட்டி நெறிப்படுத்தியவர் திருமதி.பத்மாவதி நடேசபிள்ளை ஆவார். எனது திருமணத்தை மட்டுமல்ல, எனது இரண்டாவது மகளின் திருமணத்தையும் முன்னின்று நடத்தியவர்கள் திரு.திருமதி நடேசபிள்ளை ஆவர்.

இத்திருமணம் 1986ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்றது. அவ்வேளை, திரு.திருமதி நடேசபிள்ளையின் மகள் யசோதையுடன் இந்தியாவில் இருந்தார்கள். திருமதி நடேசபிள்ளைக்கு வைத்தியம் செய்ய வேண்டியதால் இந்தியா சென்றிருந்தனர். நோயுள்ள வேளை நாம் சென்று அவர்களுக்கு மேலும் துன்பம் ஏற்படுத்தப் போகிறோமோ என்றும் மனக் கிலேசத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து நானும் மகளும் புறப்பட்டோம்.

நாம் கொழும்பிலிருந்த வேளை, திரு நடேசபிள்ளையின் தமையன் திரு.சிவ சுப்ரமணியம் காலமான செய்தி வசந்தி மூலம் கிட்டியது. எனது பிரயாணத்தைத் தொடர்வதா, இல்லையா என்பதில் தடுமாற்றம் ஏற்பட்டது. வேறு வழி இல்லாததால் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். மனக் குழப்பம் நிறைந்த நிலையில் சென்னை விமான நிலையத்திலிருந்து இரவு 12.00 மணிக்கு வெளியேறிய போதும் திக்குத் தெரியாத காட்டில் விடப்பட்டது போன்ற நிலையை உணர்ந்தேன்.

மறுநாள் மதுரைக்கு திரு நடேசபிள்ளையின் வீடு நோக்கி புறப்பட்டோம். மதுரை சென்றடைந்த போது இரவு 9.00 மணி ஆகிவிட்டது. நாம் எடுத்துச் சென்ற விலாசத்தின்படி சென்ற போதுதான் அவர்கள் வீடு மாறிய செய்தி தெரிய வந்தது. இரவு வேளையில் இரண்டு மணி நேரம் அங்கு வசித்த சிலோன் காரரின் வீட்டுக் கதவுகளைத் தட்டி இறுதியில் ''ரின்கோ அன்ரி யின்'' வீட்டை அடைந்தோம். நோய்வாய்ப் பட்டிருந்த வேளையிலும் மற்றவர்களுக்கு உதவி செய்வதில் திருமதி நடேசபிள்ளை தவறவில்லை. ஆதலால் பல சிலோன்காரர்கள் ''ரின்கோ அன்ரி'' என அன்புடன் அழைத்தனர்.

நாம் வீடு சென்றதும் எம்மை ஆவலோடு வரவேற்ற திரு.திருமதி நடேசபிள்ளைக்கு நாம் முதலில் வழங்கியது அவலச் செய்தியாக இருந்தது. திரு.சுப்பிரமணியத்தின் மரணச் செய்தி கேட்டதும் அவர்கள் பட்ட துன்பம் எழுத்தில் அடங்காதது. நாம் இந்தியா சென்றதன் நோக்கத்தைப் புரிந்துகொண்டு தம் துயரத்தை மறைத்து எமக்கு உற்சாகமூட்டியது என்னை அவர்களுக்கு மீளா அடிமையாக்கியது. என் சுமையை அவர்கள் ஏற்றனர். குறித்த திகதியில் என் மகள் சுகிர்தராணிக்கும் திரு. சிவலிங்கத்திற்கும் திருமணம் செய்து வைத்தனர். பெருமளவில் வரவேற்பு நடத்தப்பட்டது. அங்கு சமுகமளித்தவர்களின் எண்ணிக்கை திரு.திருமதி நடேசபிள்ளை எவ்வளவுக்கு பிரபல்யமாக இருந்தவர்கள் என்பதற்கான சான்று ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு உடுக்கை இழந்தவன் கைபோல் எமது குடும்பத்துக்கு உதவிய திரு.நடேசபிள்ளை குடும்பத்தினர் என்மீது அதீத நம்பிக்கை வைத்திருந்தனர். அவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம் இருந்த வேளை, அவர்களின் பிள்ளைகளான திரு.சிறீதரன், திரு.சுபதரன், திரு.வித்தியாதரன்ஆகியோர் கொழும்பில் தங்கவேண்டிய வேளைகளில் என்னை ஆலோசகராகவும் கவனிப்பாளர்களாகவும் ஏற்று நடக்க வேண்டுமென அவர்களுக்கு உணர்த்தியுள்ளார்கள். அதற்கமைய அவர்களின் பிள்ளைகள் நடந்து எனக்குப் பெருமை தேடி தந்தனர்.

நானும் திரு.நடேசபிள்ளையும் ஒத்துப்போகாத சில விடயங்களும் உண்டு. அவர் றோயல் நேவியில் வேலை செய்ய ஆரம்பித்தார். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்னும் வாசகத்துக்கு உதாரணமாகக் காட்டக்கூடியவராக வாழ்ந்தார். பின் றோயல் நேவியை அரசாங்கம் பொறுப்பேற்ற பின் ஒரு பல்தேசியக் கம்பனியாகிய சிங்கர் கம்பெனியின் சந்தைப்படுத்தும் பிரிவில் பல்வேறு தரத்திலிருந்து ஏறியா மெனேஜர் ஆகத் தரம் உயர்வு பெற்றார். திறமையான உத்தியோகத்தர் பல முறை பாராட்டும் சன்மானமும் பெற்றார். ஓய்வு பெறும் காலத்தில் உள்ளவர்களின் சேவையை தொடரும் வகையில் கம்பனி நிர்வாகம் மாற்றம் செய்தது. அதன் பிரகாரம் அவர் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் ஆனார். இது சில உத்தரவாதத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட ஏற்பாடு. நான் அந்த ஏற்பாடு பற்றி சந்தேகமும் அதன் அமுலாக்கலில் ஏற்படக்கூடிய நம்பிக்கை மோசடி பற்றியும் கூறினேன். அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் முதலாளித்துவ முறைமையில் நம்பிக்கை கொண்டவர். நாம் பல சந்தர்ப்பங்களில் அரசியல் சம்பந்தப்பட்ட விடயங்களில் உரையாடியிருக்கிறோம். ஒருமுறைதானும் இணக்கப்பாட்டுக்கு வந்ததில்லை. நான் முன்பு சந்தேகம் தெரிவித்தபடி நம்பிக்கை மோசடி செய்யப்பட்டது. அவரால் தாங்க முடியவில்லை. அவர் தான் சரியென நம்பியதைக் கடைசிவரை சாதிப்பதற்கு செயற்படுவது அவரின் சுபாவம்.

அவர் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை நீதிமன்றம் சென்று நீதியை நிலைநாட்ட முடிவு செய்தார். பல்தேசியக் கம்பனியுடன் மோதுவதால் அவர்கள் தங்கள் நிலையை நியாயப்படுத்த எல்லா தந்திரங்களையும் கையாள்வார்கள். ஆகையால் இம்முயற்சி பயனளிக்காது என நம்பிக்கை இழக்கப்பண்ணும் வகையில் கருத்துக் கூறினேன். இது அவருக்கு இதமாகப் போகவில்லை. நடவடிக்கை தொடர்ந்தது. இறுதியில் அவரது முயற்சி தோல்வி கண்டது. மிகவும் மனம் உடைந்து போனார். தன் சட்டத்தரணிகள் கம்பனிக்குச் சார்பாக நடந்ததால் தோல்வி ஏற்பட்டதாக மனம் வருந்தினார்.

நான் அறிந்த வரை முதல் தடவையாக ஹல்ஸ்ரொப் நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் மயக்க உணர்வு தோன்றியது. பின் பரிசோதித்ததில் இரத்த அமுத்தம் கூடியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவரின் ஆரோக்கிய கேட்டின் ஆரம்பப் புள்ளி அதுதான்.

எனது அவதானிப்பின்படி திரு.நடேசபிள்ளை தன் மாமன் மாமியை மிகவும் மதிப்புடன் கரிசணையுடனும் கவனித்தார். அவர்களின் வயோதிபம் மகிழ்ச்சியாக அமைய உதவினார். அவர் அங்கு செய்தது வீண்போகவில்லை. அவரின் மருமகன் திரு.ஈ.சரவணபவான் திரு.நடேசபிள்ளையின் சௌகரியமான வயோதிப வாழ்விற்கு வசதி செய்துள்ளார்.

திரு.நடேசபிள்ளையின் வாழ்வில் நாம் இனம்கண்ட சிறப்பம்சங்களை உள்வாங்கி அதற்கமைய வாழ்தல் நாம் அவரு க்குச் செய்யும் மரியாதையாக அமையும்.

சி. இராமசந்திரா

விளாத்தித் தோட்டம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலைக் கம்பன் கழக அமைப்பா ளர் ந.வித்தியாதரன் அவர்களது தந்தையாரும், எமது அகில இலங்கைக் கம்பன் கழகப் போஷ கர் ஈ.சரவணபவன் அவர்களது மாமனாரும், கம்பகாவியத்தின் பெரும் இரசிகருமான திரு மிகு செல்லையா நடேசபிள்ளை அவர்கள் 24-10-2000 அன்று அமரரானதை முன்னிட்டு எமது கழகத்தின் சார்பில் வெளியிடப்படும் அஞ்சலிக்கவிதை.

# கம்பன் கழகத்தாய் கண்ணீர் வடிக்கின்றாள்

அன்புநிறை மனமுடையார் ஆறாத அருளுடையார்
பண்புநிறைத் திருவுடையார் பக்தியெனுஞ் பேறுடையார்
என்புரக வழிபாடு இயற்றுகிற இயல்புடையார்
தென்புதரும் சொல்லுடையார் தெளிந்தமனப் பொலிவுடையார்

கண்ணெனவே தருமத்தைக் காக்கின்ற இயல்புடையார்
மன்னுபுகழ் திருமகளை மனையாண்ட மாண்புடையார்
நன்மக்கட் பேறுடையார் நலந்திகழும் திருவுடையார்
புண்ணியத்தின் வாழ்வுடையார் புகழ்கொண்ட பேருடையார்

இத்தனையும் வாய்த்ததனால் இமயமென இம்மண்ணில்
சத்தியமே வாழ்வாக சலிப்பின்றி வாழ்ந்த மகன்
அத்தனையும் பொய்யென்று அறிந்ததனால் அன்னையவள்
நித்தியமாம் பாதத்தில் நிலைத்தனராம் சாந்தியுற

பக்தியால் கம்பனது பார்புகழும் காவியத்தை
சொத்தெனவே போற்றிநிதம் சோர்வின்றி வாழ்ந்த மகன்
நித்தியமாய்க் கம்பன்பேர் நிலைத்திடவே திருமலையில்
அத்தனையும் செய்தெம்மை ஆதரித்த பெருமகனாம்

தாய் அன்பசெய்வாள், தனையர் தமைத்தருவார்
செயல் திருமகளோ செழித்து வரவேற்பாள்
ஓயாது தமிழின்பம் உய்க்கும் மருமகனும்
தாய்வீடாய்க் கொண்டேஎம் தனிக்கழகம் காதிடுவார்

கம்பன் கழகத்தில் கனிவோடு இக்குடும்பம்
தம்மைக் கரைத்து தனிப் புகழைத் தந்ததுவே
எம்மை யுயர்த்தி ஏற்றமெலாம் செய்தவர்கள்
உம்மைப் பிரிந்து ஓங்கியழ உளம்நொந்தோம்

நம்பீ! உமைப்பிரிந்து நற்குடும்பம் வாடியழ
வெம்பும் அவர்மனத்து வேதனையைத் தீர்ப்பதற்கு
தெம்பதர வார்த்தைகளைத் தேடிக் கிடைக்காமல்
கம்பன் கழகத்தாய் கணட்ணீர் வடிக்கின்றாள்.

*அகில இலங்கைக் கம்பன் கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An Elegy to My Appa

A thousand Memories rush in
Like a silver cascade falling into a clear pool
some clear like the morning Sun
a few hazy ones, like the distant view yonder
while a few others like the dewdrop on a grassblade
Vanished before the beautiful presence is felt
Memories, Memories of you Appa
Cherished in the depth of my heart
Each one of them smelling sweeter than ever
Each one of therm bearing the fragrance
Which is Sweeter than the Sweetest smelling flower.

Appa the very thought of you makes me nostalgic
In every place thing I behold, you are there;
In every sight I perceive you are here
Appa your memories
Spluttering like water droplets in the sun
creating a million hues
Appa I still feel your warmth
You holding my hands tenderly
Oh! the times you took me to the seashore
To see infinite diamonds glistening in the water
Appa, now the sea looks all grey to me
Appa, adversity teaches man many things
Your loss which is unbearable
Has taught me to endure
But Appa, my heart does not listen to mind's reason
The thought I can't see you again
Or feel your warmth
Makes my heart bleed
Appa, the day you took me to the look store
The day is emgrossed in gold in my memory
I was too young to choose the subject too naive
Appa you had the patties to explain things to me



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Your were like the mother always ready to feed
His gluthonous young ones; only difference
You redered the the easerness to learn
You fed me with knowledge and enlightened my ignorance.

Appa, your most severe scolding was
But tender admonishment packed with care & concern
You never commanded but always explained
You never dominated but treated me at par
Gossiping and back biting never came easy to you
Creating politics was not one of your favourite
You were never partial but always universal
Appa, you were my hero
Though I could never be you
I will always try to emulate you
I will always try to better myself
Trying to be like you in all my endeavours
Appa, your loss drew a thousand swords into my heart
Your place is irreplaceable,
Your smell still lingers in my nostrils
Appa, you made me feel that I was special to you
Appa, you responded to me ever at your last breath
Thank you Appa, for what you were
And for all that you did to me
I am what I am because of you
I do not miss you any more
For you have stopped being mutual
But transcendental
Now you are with me in all my actions
I feel your spiritual presence and guidance
Glowing over my head
What else do I want

With Love

**Nadesapillai Ravitharan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடேசபிள்ளை அண்ணன்

எனது மைத்துனர் கழகப் புலவர் சிவசேகரம் அவர்களது குடும்பத்தார் மூலம் சுமார் 50 வருடங்களாக நடேசபிள்ளை ஐயாவை நான் கன்கறிவேன். சிவசேகரம் குடும்பத்தாரும் அவரது உறவினர்களும் ஐயாவை நடேசபிள்ளை அண்ணன் என்னும் செல்லப் பெயரால் அன்போடு அழைப்பார்கள். பள்ளிப் பராயம் தொட்டு சிவசேகரம் அவர்களோடு ஒன்றாகப் படித்து ஒன்றாக விளையாடியது மட்டுமல்ல குடும்பத்துப் பிள்ளை போலவும் வாழ்ந்திருக்கிறார். படிப்பு முடிந்து உத்தியோகம் பார்த்த பின்பும் இத்தொடர்பு கடைசி வரை நீடித்திருந்தது.



அமரர் நடேசபிள்ளையுடன் கட்டுரையாளர்

யாழ்ப்பாணத்தில் சிங்கர் கம்பனியில் பிராந்திய முகாமையாளராகப் பணிபுரிந்த காலத்தில் அவருடன் பழகியிருக்கிறேன். அவரது காரியாலயத்தில் சந்தித்து ஆத்மீக, சமய, சமூக விஷயங்களைப் பற்றி கலந்துரையாடுவோம். ஐயா ஓய்வு பெற்று திருகோணமலைக்கு வந்த பின்பும் அடிக்கடி சந்தித்து உரையாடுவோம். ஐயாவின் சந்திப்பு சத்சங்கமாகவே அமையும். ஆங்கிலத்திலும் தமிழிலும் சமய, இலக்கிய நூல்களை அதிகமாகப் படிப்பார். அவற்றை தானும் படித்து மற்றவர்களுக்கும் கூறுவார். இதில் ஐயாவுக்கு ஓர் இன்பம். என்னிடமும் பல புத்தகங்களை வாங்கிப் படிப்பார்.

செய்யும் தொழிலே தெய்வம் என்பது ஐயாவின் கொள்கை. கம்பனிக் கடமைகளை நேர்மையாகவும் மென்மையாகவும் செய்து மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றார். 'கடமை செய், பலனை எதிர்பார்க்காதே' என்ற பகவத்கீதையின் உபதேசத்தை ஏற்று வாழ்ந்தார்.

பிற்காலத்தில் கடவுள் பக்தியிலும், கோவில் வழிபாட்டிலும் அதிகமாக ஈடுபட்டார். தர்மம் தலைகாக்கும் என்றபடி தர்ம விஷயங்களில் பங்குகொண்டார். அநாதை இல்லங்களுக்கும் ஆலயத் திருப்பணிகளுக்கும் உதவினார். ஆலயம் தொழுவது சாலவும் நன்று. ஆலயங்களை பக்தி சிரத்தையுடன் வழிபட்டால் மனப் பக்குவம் ஏற்பட்டு வாழ்க்கையை வளம் படுத்தலாம். பத்திர காளி அம்பாள் ஆலயத்துக்கும் பெருந்தெரு ஞானவைரவர் ஆலயத்துக்கும் கூடுதலாக திருப்பணி செய்து மன நிறைவு பெற்றார். பல புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செய்தார்.

ஐயா எல்லாரிடமும் இன்முகத்துடன் பழகுவார். எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படுவார். கோபத்தை ஐயாவிடம் காணமுடியாது. எந்த நிலையிலும் அமைதியாகவும்

(ம.ம.பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அப்பப்பா!

அப்பப்பா என்று இனி கூப்பிட யாருமில்லை. அப்பப்பா எப்படிக் கதைப்பார், அப்பப்பா எப்படி நடப்பார் என்பதைக் கூட இனி மற்றவர்களுடன் கதைக்கும் போதுதான் உணர்ந்து கொள்ள முடியும். அப்பப்பா இருந்தால் எப்படி இருக்கும் என்று இனி நான் படப் போகும் ஏக்கத்தை யார் தீர்ப்பார்? நான் நன்றாகப் படிப்பதைக் கலைகளில் தேர்ச்சி பெறுவதைக் கண்டு பாராட்ட எனக்கு மட்டும் அப்பாப்பா இருக்க மாட்டார்! அப்பா, அம்மா சொல்வதைப் போலக் கடவுளுடன் இருந்து சிலவேளை பார்ப்பாரோ?

**பேத்தி சிவை** (கனடா)

---

*முன்பக்கத் தொடர்ச்சி...*

பொறுமையாகவும் இருப்பார். துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதல் கூறுவார். பொறுமையின் மூலம் ஐயா வாழ்க்கையில் பல வெற்றிகளைக் கண்டார்.

அகில இலங்கைக் கம்பன் கழகத்துக்கும் திருகோணமலை கம்பன் கழகத்துக்கும் திருகோணமலை திருவள்ளுவர் கழகத்துக்கும் ஊக்கம் கொடுத்து அவற்றின் வளர்ச்சிக்கு தம்மாலான பணிகளைப் புரிந்தார். சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டும் என்பது ஐயாவின் ஆசை.

என்னைச் சந்திக்கும் போதெல்லாம் எனது வாழ்க்கை முறைகளைக் கேட்டறிந்து அவற்றை ரசிப்பார். எனது சுய சரிதையை எழுதித் தரும்படி கேட்பார். தாம் ஒழுங்காக வாழ்ந்ததோடு நில்லாது மற்றவர்களையும் ஒழுங்காக வாழத் தூண்டி முன்மாதிரியாக நடந்தார்.

''தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் ''

''மகன் தந்தைக்காற்றும் நன்றி அவையத்து
என் நோற்றான் கொல்லெனும் சொல்''

இவ்விரு குறள்களுக்கும் பொருத்தமாக தந்தையும் மக்களும் வாழ்ந்தார்கள். பிள்ளைகள் எல்லோரும் நன்கு கற்று , நல்லவர்களாக வாழ்கிறார்கள்.

ஐயாவுக்கு நாம் செய்யும் கைமாறு அவர் விரும்புகிறபடி தமிழ், சமய நூல்களைக் கற்று, கற்றபடி ஒழுகி தமிழையும் சமயத்தையும் வளர்ப்பதுதான்.

ஐயாவின் பிரிவால் வருந்தும் மனைவி, மக்கள், உற்றார் உறவினர் நண்பர்கள், அனைவருக்கும் ஆறுதல் கிடைக்கவும் ஐயாவின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

இன்பமே சூழ்க. எல்லோரும் வாழ்க.

முத்துக்குமாரசுவாமி கோயிலடி
திருகோணமலை
10.11.2000

**பொ.கந்தையா**
*காந்தி ஆசிரியர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Appappa

I love my appappa very much. He was very loveable and kind to me.

He always taught me the good things in life.

Appappa always played with me, he was the watcher when I played with my dolls.

I love him very much because he was the only grandpa I ever had.

I love you and I miss you very much appappa.

Grand daughter
Lukshinee



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழோடு தோன்றினார்

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற திருவள்ளுவரின் குறட்பிரகாரம் எத்தனையோ பேர் பிறந்திருக்கிறார்கள். அவர் களில் அமரர் நடேசபிள்ளை அண்ணர் அவர்களும் ஒருவர் என்றால் மிகையாகாது. அன்னாரை எனது கல்லூரி நாட்களிலிருந்தே நான் அறிவேன். பிரித்தானிய கடற்ப டைத்தளத்திலும், பின்னர் சிங்கர் கொம்பனியின் முகாமையாளராகக் கடமையாற்றிய போதும் அன்னார் எவ்வித தற்பெருமையுமில்லாது மற்றவர்களுடன் பழகியவிதம் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. அவரது பேச்சில் இன்சொல்லைத்தவிர எவ்வேளை யிலும் வன்சொல் தெரிவதில்லை. ஆலயங்களின் புனருத்தாரணம் போன்ற இறைப ணிக்கு இல்லை என்னாது தன்னாலியன்ற எவ்வித உதவியையும் செய்வதில் பின்னிற் காமை அவரது இறைபக்தியை உணரக்கூடியதாகவுள்ளது.

இல்லறத்தில் மட்டுமல்ல நல்லறத்திலும் அவர்காட்டிய வழி என்னைப் பெரிதும் புள காங்கிதமடையச் செய்யும். வாசித்தல் மனிதனைப் புனிதனாக்குகிறது என்ற முதியோ ரின் வாக்குப்பிரகாரம் அன்னார் வீட்டில் ஓய்வாக இருக்கும்போது பகவத்கீதை, சத்தி யசோதனை, சத்யசாயிபாபாவின் அறிவுரைகள் போன்ற நற்பயனுள்ள புத்தகங்களை வாசிப்பதையே நான் அவரைச் சந்திக்கும்போது கண்டிருக்கிறேன்.

இதனால் அவரை ஓர் புனிதனாகவே என்னுள் எண்ணுவேன். பண்பு, அன்பு, பாசம், நட்பு போன்ற எல்லாமே அவருள் அடக்கம்.

தனக்குவமையில்லாதான் தாழ்சேர்ந்த அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**எம். கே. செல்வராசா**
*சட்டத்தரணி*

*தலைவர்*
*கோணநாயகர் பரிபாலனசபை*
*திருகோணமலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன தாத்தா அவசரம்?

**-பேத்தி ஷிவானி ரவிதரன்**

தாத்தா! ஒரு கண்ணில் வெண்ணை
மறுகண்ணில் சுண்ணாம்பா! என்ன நியாயம்?
எனது எட்டு அண்ணன், அக்காக்களுக்கு, வெண்ணையாக
அவர்களை கொஞ்சினீங்க, சீண்டி விளையாடுனீங்க,
ஆனால் எனக்கு என்ன செய்தீங்க?
கண்ணாடியை பிடுங்கவிடவில்லை,
பூந்துண்டால் அடிக்க விடவில்லை
உங்களோடு சண்டையிடவில்லை, வாயாட வில்லை
எனது பிஞ்சுக் கால்களால் உங்களை உதைக்கவிடவில்லை
குஞ்சு கைகளால் கண்ணத்தை கிள்ள விடவில்லை
எனக்கு இப்போ மூன்று பற்கள் வந்துவிட்டன, தெரியுமா?
நான் உங்கள் மிருதுவான விரல்களை கடிக்க விட்டீர்களா?
என்ன தாத்தா அவசரம் உங்களுக்கு?
என்னை எடுத்துக் கொஞ்சாமல்; அமரர் ஆவதற்கு.
அம்மா என்று சொன்னேனா?
அப்பா என்று சொன்னேனா?
தாத்தா! தாத்தா! தாத்தா! என்று பொக்கை வாயால் சொன்னேனே?
கேட்கவில்லையா? என் மழலை
கேட்காததால்தான் மறைந்தீர்களா?
தாத்தா! நான் வளர்ந்து வர காத்திருக்கவில்லையென்றாலும்
பிறந்தபோது பிரார்த்தித்து காத்திருந்ததை அறிந்தேன்,
உங்களுக்கு அடிக்க வில்லையென்றாலும், மடியில் கிடந்துவிட்டேனே! புதுப்பூவாய்!
என்னை 'அடியே பெட்டை!' என்று விளித்து
உச்சி முகர்ந்து விட்டீரே, போதும் எனக்கு.
தாத்தா! நான் அப்பாவுக்கு தப்பாமல் பிறந்தவள்
அப்பா உங்களை நக்கியது போல், நான் அப்பாவை நக்குகிறேன்.
தாத்தா! நான் சொன்னதைக் கேட்டு சிரிக்கிறீர்களா?
பக்கத்தில் இல்லையென்றாலும், நினைவில் இருப்பீர்கள்.
அம்மா சொல்வாள் மலரும் நினைவுகளை.
ஆதலால் கொடுக்கிறேன் பிரியாவிடை.
மறுகண்ணில் சுண்ணாம்பு வைத்து
எனக்கு வஞ்சனை செய்த தாத்தாவிற்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# பெருவாழ்வு பெற்ற உத்தமர்

இறை சிருஷ்டியில், மானிடப் பிறவி என்பது சிரேஷ்டமான மகத்தானதொரு படைப்பு. ஜனனம் - மரணம் என்று தோன்றி மறையும் கால இடைவெளியில் பலர் தம் வாழ்க்கை என்ற உயிரோட்டத்தில், பல படிப்பினைகளைத் தந்து செல்கின்றனர்.

நம் அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய நடேசபிள்ளை மாமா அவர்களை ஒரு கணம் எம் மனதில் நிறுத்தி எண்ணங்களை ஓடவிட்டால், அவரது ஆத்மா ஓர் உயர்ந்த நிலையில் இருப்பதை சூக்குமமாகக் காணலாம். அதற்கு அத்தனை பக்குவம்.

ஒரு ஜீவனுடைய பிராரப்த எண்ணங்களின் திரட்சியுடன், மனமும் சூக்கும சரீரமும் சேர்ந்து, அதனுடைய சூழ்நிலைக்கு ஏற்ப, வேறோர் உடலைத் தெரிவு செய்து, அதனுடன் சேர்ந்து விடுகிறது. இதனைப் பிறப்பு என்கிறோம். இந்த வகையிலே அன்புக்குரிய மாமா அவர்களின் ஜனனம் - வாழ்வு - மரணம் என்பவை மனித வாழ்க்கையை சிந்திக்கத் தூண்டுகின்றன.

தளர்ந்த நிலையிலும் கம்பீரமான நெடியதொரு தோற்றம்; அன்பான மலர்ந்த முகம்; அமைதி - அடக்கம் - பொறுமை அவரது அணிகலன்; மென்மை கொண்ட அவர் உரத்துப் பேசி என்றுமே கேட்டதில்லை. அளவான பேச்சு; இவை அவருக்கே உரியவை.

இலங்கையின் சிவபூமியான திருக்கோணமலையில் ஞான ஒளிபரப்பி, ஆன்மீக நெறி வளர்த்த பிரம்ம ஞானி ஸ்ரீமத். சுவாமி கெங்காதரானந்தா அவர்களின் பூரண ஆசியைப் பெற்றவர்கள் இக் குடும்பத்தினர். சுவாமிஜியின் ஆச்சிரமத்துக்கருகே அமைந்த இல்லத்தில் இவர்கள் வாழ்ந்த பொழுது, அந்த மகானின் தொடர்பு இன்னும் நெருக்கமாகக் கிட்டியது.

''நல்லறமிக்க இல்லறத்திலிருந்து ஒழுக்கமுடைய மக்கள் பிறக்கின்றனர்.'

- சுவாமிஜி அவர்கள் இயற்றிய பஜனாமிர்தத்தின் ஒரு துளி இது. இதற்கிணங்க நடேசபிள்ளை தம்பதியர், தம் பூர்வ ஜென்ம வாசனைகள், குண விசேஷங்களுக்கமைய, அவர்களது பிள்ளைச் செல்வங்களை நல்ல முறையிலே, நல்ல சுபாவ சுத்தி - இறை பக்தியுடன் கூடி வளர்த்து வருகிறார்கள் என்று மனம் நெகிழ்ந்து, அந்த மகாஞானி தன் திருநாவினால் இயம்பிய வாசகங்களை இவ்விடத்திலே நினைவு கூருகிறேன்.

ஒரு குடும்பத்தின் சகல ஐஸ்வரியங்களும், அக் குடும்பத்தின் புருஷ தர்மத்திலும், அவருடன் இணங்கி வழி நடத்தும் லக்ஷ்மியின் பிரதிரூபமான மனையாளின் அந்நியோன்னியத்திலும் ஐக்கியப்பட்டிருப்பதற்கு மாமாவின் குடும்பம் நல்ல உதாரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாக - தாதியாக - ஆலோசகராகப் பரிணமித்த அன்பு மனைவி; நற்குணமும் - பண்பும் - பல்கலையும் - நல்வளமும் பெற்று உயர்ந்து நிற்கும் நன்மக்கள்; அவர்கள் வாழ்வின் உற்ற துணையாகத் துலங்கும் மருமக்கள். மழலை இன்பம் தந்திடும் பேரக் குழந்தைகள்; இத்தனைக்கும் மத்தியில் தலைவனாக அமைதியாக எளிமையாக வாழ்ந்த மாமா அவர்கள் முற்பிறப்பில் எத்தகைய நோன்பு நோற்றிருக்க வேண்டும்?

அவரது அப்பழுக்கற்ற - களங்கமற்ற - வாழ்வினை ஒரு நிமிடம் ஆழமாகச் சிந்திக்கிறேன்; ஆன்மீக ஈடுபாடு பெரியோர்கள், சாதுக்கள், சந்நியாசிகள், ஞானிகளின் ஆசி - ஆலயத் திருப்பணிகளில் பக்திபூர்வமான பங்களிப்பு - சமயப் பற்று - ஆரவாரமில்லாத வாழ்க்கை; இவற்றின் பலாபலன்களையெல்லாம், வாழ்க்கை என்ற வங்கியில் சஞ்சிதம் என்ற கணக்கில் தன்னை அறியாமலே வைப்பிட்டுச் சென்றுள்ளாரோ என்றே நினைக்கத் தோன்றுகிறது. பூர்வ வாசனையின் பலம் அற்புதமானது.

இரண்டு மாதங்கள் படுக்கையில் நோயுடன் போராடிக் கொண்டிருந்த பொழுது, கொழும்பில் அவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கும் சகோதரிக்கும் கிடைத்தது. பல்லாண்டு காலம் கருத்தொருமித்து இணைபிரியாது வாழ்ந்த அன்பு மனைவி - நோயுற்ற வேளையிலும் தன்னிலை மறந்து, கருணையே உருவாய், இரவு பகல்துயிலாது பணிவிடை செய்த பாக்கியம்; கேட்ட குரலுக்கெல்லாம் அன்பும் பாசமும் பொழிந்து ஓடோடி பணிசெய்த மக்கள், மருமக்கள்; இவை அந்த நல்லவரின் பிராரப்த - ஆகாமிய வினைகளை ஒன்றும் விடாமல் சுகமாக அனுபவிப்பதற்கு அனுகூலமாக இறைவன் அளித்திருக்கும் பெரும் பேறு என்றே ஒரு கணம் சிந்தித்தேன்.

நிச்சயமாக அவரது ஆத்மா சாஸ்வதமான உன்னத நிலையை அடைந்திடும் என்பதில் சிறிதளவும் சந்தேகம் இல்லை. ஸ்ரீமத். சுவாமி. கெங்காதரானந்தா **கூறுகிறார்.**

''மரணம் என்பது ஜீவனைப் பொறுத்தவரை புதிய சக்தியும், உற்சாகமும், புது ஆற்றல் திறமையும், உயிரில் உருவாகும் ஒரு புனிதமான நிகழ்ச்சி.''

''பழுதடைந்த உடையை மாற்றிப் புது உடை அணிவது போன்று ஜீவன் தனது இலட்சியத்தை அடையும்வரையும் பழுதடைந்த சரீரத்தை மாற்றிப் புது சரீரத்தில் நுழைய வேண்டியிருக்கின்றது.''

**தா. சியாமளாதேவி.**

71, பிரதான வீதி,
திருகோணமலை.
14-11-2000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ மாமனாக நான் என்ன தவம் செய்தேன்?

வாழ்வாங்கு வாழ்ந்தார் வானுறையும் தெய்வத்தோடுசேர்ந்தார் - இவர்
போல்வாழும் வாழ்வு பொய்யா மொழியின் போக்கே
தாழ்வாரையும் தாங்கி தன் மக்கள் போல பார்த்தார்
தரம் பார்க்கும் மனித வாழ்வில் குணம் பார்த்து குற்றம் களைந்தார்.
தாய்மாமன் நிழலில் நான் தங்கவில்லை வாழ்வில்
நீமாமன் ஆக நான் என்ன தவம் செய்தேன்
தாயிழந்த நாளில் நானிறக்கலானேன் பாரில்
நீயிருந்து காத்தாய் நிறையறிவு தந்தாய்.
நீபாசமழை பொழிந்த அந்தக்காலம் என்றும் பசுமை அதில்
உண்மை யன்பைக் கண்டேன் அதில் உன்னையே நான் கண்டேன்
நீபேசமழை பொழிந்த அந்த அறிவுரையின் வளமை
நான் பேணிமகிழ போதும் அந்த கால நினைவே போதும்
காரில் போகும் போதுகூட நான்கேட்கும் கானம் யாவும்
திருமுறையின் திரட்டு அது நீதந்த பழக்கம் - நீ
தேரில் போகும் நாளை நான் பார்க்க அங்கு இல்லை
பாரில் வந்தார் போவார் சிலர் நினைவில் என்றும் நிலைப்பார்

*நடேசபிள்ளைமாமா குடும்பத்தாருக்கு*
*அருள்ஜோதிச் சந்திரன் குடும்பத்தாரின்*
*கண்ணீர்க் கவிதாஞ்சலி*

# விண்ணுலகு செல்லும் செம்மலே!!!

விளைந்திருந்த வயலொன்று வரண்டு போக
நிறைந்திருந்த நிலவொன்று உதிர்ந்து வீழ
விளங்கிட்ட விளக்கொன்று விடைபெற்றிட
உரைத்திட இயலாத துன்பமெமக்கு.
அப்பாவாய், மாமாவாய் அத்தனையுமாய்
அன்புக்கு வரைவிலக்கணமெழுதி பண்புக்கு
படிமுறை வகுத்து
வாழ்வாங்கு வாழ்ந்த வள்ளலே!
வாழ்ந்த நாளெல்லாம் நல்லதே செய்து வீழும்
கணம்வரை தர்மத்தைக் காத்து விலகி
விண்ணுலகு செல்லும் செம்மலே!!
சென்று வருக!
வரும் காலமெல்லாம்
மனதில் நிறைப்போம் - உங்கள்
நினைவுகளை!!

***கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்***
*சாம்பியன் லேன்,*
*கொக்குவில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி பக்தர் நடேசபிள்ளை

ஆலவிருட்சம் ஒன்று சாய்ந்து விட்டது. ஆம் நடேசபிள்ளை என்ற அந்த அருமந்த மானுடர் மறைந்து விட்டார்.

இருப்பினும் அவரது வாழ்க்கை நெறி இமயமென ஓங்கி நிற்கிறது.

'சின்ன மாமா' இப்படித்தான் நான் வாஞ்சையுடன் அவரை அழைப்பேன். எனது தாயாரின் இளைய சகோதரர் என்பதால் ''விளையும் பயிரை முளையில் தெரியும்'' என்பார்கள். சிறுவனாக இருந்த போது இவர்கள் வீட்டில் தமது மாடுகளுக்கு வைக்கோல் வாங்கி தொகையாக அடுக்கி இருப்பர். உணவுக்கு அலமந்து செல்லும் தெரு மாடுகளைக் கண்டதும் கதவுகளைத் திறந்து விடுவார் சிறுவன் நடேசபிள்ளை. அவை வயிறு புடைக்க வைக்கோலைத் தின்று விடும். இப்படிப் பல தடவைகள் நடைபெறும். தந்தையார் இவரை அழைத்து விசாரித்தார். காரணத்தை அறிய விழைந்தார். இவர் சொன்ன பதில் பெற்றோரை பிரமிக்க வைத்தது.

''எங்கள் வீட்டு மாடுகளுக்கு இங்கே நிறையத் தீனி உண்டு. தெரு மாடுகளுக்கு யார் தீனி போடுவார்கள்'' இப்படி விளக்கமளித்தார். சிறுவன் நடேசபிள்ளை. சின்ன மாமாவின் ஈர நெஞ்சத்தின் ஊற்றுக் கண்ணை இக் காட்சியில் காண்கிறேன்.

கோணேசர் பூமியில் 1918ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் திகதி இராமநாதபிள்ளை (செல்லையா) - தங்கம்மா தம்பதிகட்குப் புதல்வனாகப் பிறந்தார். இவருக்கு மூன்று சகோதரிகள் ஒரு சகோதரன். திருமதி சிவகாமி அம்மா செல்வரட்ணம், திருமதி அழகம்மா வேதநாயகம் ஆகியோர் இவருக்கு வயதில் மூத்தவர்கள். திருமதி தனலஷ்மி சண்முகராசா இவருக்கு இளையவர். திரு. சிவசுப்பிரமணியம் இவரது அண்ணர். சின்னமாமா வாலிப வயதில் தனது தந்தையாரை இழந்தமையால் தமையன் சிவசுப்பிரமணியம் குடும்பப் பொறுப்பை ஏற்றார்.

அண்ணன் - தம்பி உறவுக்கு சின்னமாமாவும் பெரிய மாமாவும் நல்ல உதாரணர்கள். பெரியவராகித், திருமணமாகி, பல குழந்தைகளுக்குத் தந்தையாகிய பின்னரும் கூட சின்னமாமா தனது தமையன் முன்னர் சரி சமமாக ஆசனத்தில் அமர மாட்டார்.

சில விடயங்களில் இவர்கள் கருத்தொருமிக்க முடியாது போனாலும் கூட நேருக்கு நேர் வாய்த்தர்க்கம் செய்ததையோ, வார்த்தைகளை அள்ளி வீசியதையோ, நான் கண்டதில்லை. மாறாக இருவரும் தமது தமக்கையார் சிவகாமி அம்மாளிடம் தமது பிரச்சினையைக் கூறுவார்கள். இரு பக்க நியாயங்களையும் கேட்ட பின்னர் ஆறுதலாக பக்க சார்பின்றி, சுயநலமின்றி, தியாக சிந்தையுடன் அந்த அம்மாள் ஒரு முடிவு எடுப்பார். அந்த முடிவுக்கு இருவரும் சகோதரிகள் அனைவரும் மகுடி கேட்ட நாகம் போல் கட்டுண்டு போவர் இப்படி ஒரு மரபு இக் குடும்பத்தினரிடம் இருந்ததாலோ என்னவோ அங்கு கூட்டுக் குடும்ப உணர்வு துளிர்த்து வளர்ந்தது. பல குடும்பங்களின் சாம்ராஜ்யமாக அது திகழ்ந்தது.

'ஒரு பானை சோற்றை ஒன்று கூடி உண்.
ஒரு கூரை நிழலில் ஒற்றுமையாய் வாழ்
பகைதனை மற அன்பினை வளர்'

இது சிவாகாமி அம்மாள் அடிக்கடி தனது சகோதரிகளுக்கும், மருமக்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகளுக்கும் எடுத்துக் கூறும் மந்திரம், மறைமொழி. இதுவே எமக்கு சிவகாமியம் ஆனது.

சின்னமாமாவுக்கு அவருடைய தாய் மாமன் பொன்னுச் சாமியின் மகள் மீனாம்பிகையை பெரிய மாமா மாமி திருமணம் செய்து வைத்தனர். அவர் சிறிது காலத்தில் காலமானார். எனது தந்தையார் வேதநாயகம் அவர்கட்கு சற்று சோதிடம் தெரியும். திரு சங்கரப்பிள்ளை மரகதமாணிக்கம் தம்பதிகளுடன் எனது தகப்பனார் மிக நெருக்கமாகப் பழகினார். அவரது மகள் பத்மாவதியின் சாதகத்தைக் கண்டார். சின்ன மாமாவின் சாதகத்தையும் ஒத்துப் பார்த்தார்.

"உங்கள் இருவரின் சாதகங்களையும் நன்கு பரிசீலித்தேன். திருமணப் பொருத்தம் உண்டு. சந்தானச் செல்வமும் சௌபாக்கியமும் பெருகும்' கொழும்பில் இருந்து விடுமுறையில் திருகோணமலை வந்த சின்ன மாமாவிடம் எனது தந்தையார் இப்படிக் கூறினார் அவரும் தலையசைத்தார். எனது தகப்பனாரின் கூற்றுப் பொய்யாகவில்லை.

சின்ன மாமா - பத்மாவதி திருமணம் 1954ம் ஆண்டு ஜனவரி 21 இல் கோணேசர் கோயிலில் இனிதே நடைபெற்றது மாமியின் தம்பியார் திரு. தருமராஜா தான் மாப்பிள்ளைத் தோழன். இவர் எனது கல்லூரி நண்பனும் கூட, அவர் சம்பிரதாயபூர்வ மாப்பிள்ளைத் தோழனாக இருக்கவில்லை. சின்னமாமா நோயுற்ற காலத்திலும் அருகில் இருந்து கை கொடுத்தார். சின்ன மாமா நோய் வாய்ப்பட்ட இறுதி நாட்களில் மாமி குழந்தைகளுடன் மாமாவை நன்கு கவனித்தவர் இவர்.

சின்ன மாமா, பத்மா மாமி குடும்பம் சந்தானச் செல்வம் பெற்ற குடும்பம். மூத்த மகள் சிறிதரன் அவர் கணக்காளராகப் பதவியேற்று சம்பியா சென்ற போது சின்ன மாமா மகிழ்ந்தார். பெருமையடைந்தார். இவர் செல்வி கலாவைத் திருமணம் செய்துள்ளார். இரண்டாவது மகன் பொறியியலாளர் சுபதரன். செல்வி அமிழ்தினியைக் கரம் பிடித்தார், சிவை என்பது அவரது புதல்வியின் பெயர். சுபதரனின் அமைதி, ஆரவாரமின்மை, நடுவுநிலைமை, யாரையும் புண்படுத்தாத இன்சொல், உறவினருக்கு அவர் காட்டும் பரிவு கண்டு சின்னமாமா பெரு மகிழ்வுற்றார். நிம்மதி கண்டார் என்பது எனக்குத் தெரியும்.

மூன்றாவது மகன் வித்தியாதரன் புகழ் பூத்த பத்திரிகையாளன், எழுத்தாளன், பேச்சாளன். அவரது மனைவி செல்வ கலா. இவர்கட்கு சிவகாமி, சிவப்பிரியா என்று இரு புதல்விகள். இவர் சமூகத்தில் சகல மட்டத்தினருடன், சௌஜன்யமாகப் பழகி சாதாரணர்கள், ஏனையோர் யாபேரினது நன்மதிப்பைச் சம்பாதிப்பது கண்டு இறும்பூதெய்துவார். சின்ன மாமாவின் புதல்வி யசோதை, 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் உரிமையாளர் நிர்வாக இயக்குனர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்களைத் திருமணம் செய்துள்ளார். செல்வி லக்ஷ்மி இவர்களின் மகள்.

தனது புதல்வி மீது இவருக்கு தணியாத ஆறாத அன்பு. அவரின் கணவரும் சின்னமாமா தம்பதியினரை மிகவும் அன்புடன் முதுமைக் காலத்தில் பேணியதுடன் அவர்களுக்கு சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்துள்ளனர். தந்தை தாய் வழி நின்று கடவுள் பக்தி பேணுவார். விரதம் காப்பார். தனது மருமகன் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு தேசிய பத்திரிகையை வெளியிடுகிறார் என்பது இவருக்கு பெருமிதம் தந்தது. பின்னர் இப்போது புதிய பாணியில் 'சுடர் ஒளி' என்ற பத்திரிகையை தலைநகரில் வெளியிடுவதும் அவருக்கு மிக்க சந்தோஷத்தைத் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமகனும் அவரது குடும்பத்தினரும் சின்னமாமா மீது பேரன்பு கொண்டிருந்தார்கள் என்பது எனக்குத் தெரியும் மரணச்சடங்கின் போது மருமகனைக் கட்டித்தழுவி அவரது தாயார் திருமதி. ஈஸ்வரபாதம் கண்ணீர் மல்கக் கூறியதைக் கேட்டேன். எந்தப் பிரச்சினை என்றாலும் 'மாமா இருக்கிறார் என்று அடிக்கடி கூறுவாயே இனி யார் உனக்கு ஆதரவு' இப்படித் தாயார் அவரைக் கேட்டார்.

அடுத்தவர் சசிதரன் டென்மார்க்கில் தொழில் புரிகிறார். தனது சொந்த மச்சாள் செல்வி உருத்திராங்கனியை மணம் புரிந்துள்ளார். இவருக்கு விஜயசாயி, வித்தியசாயி என்ற இருமகன்களும் வைஷ்ணவி, அபிராமி என்ற இருமகள்களும் உண்டு. சசிதரனின் குறும்புகள் நகைச்சுவைமிக்க பேச்சு இவருக்கு மிகவும் பிடிக்கும். இவற்றைக் கேட்டுக் குலுங்கி குலுங்கிச் சிரிப்பார். அடுத்த மகன் ரவிதரன். அச்சகக் கலை பயின்று 'சுடர் ஒளி' பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றுகிறார். செல்வி உமாவினை மணம் புரிந்துள்ளார். இவர்களின் மகள் சிவானி. அடுத்த மகன் துளசி தரன். இவர் கனடாவில் மாணவனாக இருக்கிறார். இவர்கள் இருவரையும் மிகவும் நேசிப்பார் மாமா. இவர்களும் தந்தை மீது மிகவும் பாசம் பூண்டுள்ளனர்.

சின்ன மாமா தனது மாமனார் சங்கரப்பிள்ளை மாமியார் மரகதமாணிக்கம் ஆகியோரைத் தனது பெற்றோர் போன்று மதித்து அவர்கட்குரிய கடமைகளைச் செய்தார். தனது மனைவியின் சகோதரி சகோதரர் குடும்பத்தாரை மிகவும் நேசித்தார். ஈசாமாமி, ஜோதி மாமா சின்னமாமாவிடத்து நிறைய அன்பு செலுத்தினர். ஜோதிமாமாவின் சிரிக்க வைக்கும் கதைகளைக் கேட்டு மகிழ்வதில் சின்ன மாமாவிற்கு நல்ல ஆர்வம்.

வாழ்வில் தென்றல் தழுவிய போதும் புயல் வீசிய காலத்திலும் சின்ன மாமாவுக்கு பத்மா மாமி ஒரு துணையாக உறுதுணையாக இருந்தார். தல யாத்திரையினை ஒன்றாகவே செய்யும் அருமந்த பாக்கியம் இவர்களுக்கு கிடைத்திருந்தது. சின்ன மாமா தனது 83 அகவை வாழ்வில் மூன்று மாதங்களுக்குக் குறைவாகவே இப்படி நோய் வாய்ப்பட்டார். அந்தக் காலத்தில் மாமி காலனுடன் போராடிக் கணவனைக் காத்திடத் திடசங்கற்பம் பூண்டிருந்தார்.

உணவு, உறக்கம் ஓய்வின்றி இரவு பகலெனப் பாராது தனது உடல் நிலை இடந்தராத போதும் அனைத்தையும் துச்சமெனக் கணித்து சின்ன மாமாவுக்குப் பாசமுடன் சேவை செய்த பாங்கு கண்டு நானும் எனது வாழ்க்கைத் துணை வில்வராணியும் நெஞ்சம் நெகிழ்ந்து மனம் கலங்கினோம். கண்கள் பனித்தன.

1957 முதல் சிங்கர் கம்பனியில் உயர் பதவியில் வேலை பார்த்து ஓய்வு பெற்ற சின்ன மாமா முகாமைத்துவம் தனக்கு அநியாயம் செய்து விட்டது. என்று கூறி அந்த நிறுவனத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்ல விரும்பினார். அப்போது பெரிய மாமா கொழும்பில் எம்முடன் வசித்தார். தம்பியாரின் விருப்பத்தை நிறைவேற்ற தமையானார் பெரிய மாமா முன் வந்தார். வழக்கு விசாரணை நீண்ட காலம் நடைபெற்றது. வழக்கு விசாரணை தினங்களில் பெரிய மாமாவும் நானும் சின்ன மாமாவின் இரு மருங்கிலும் அமர்ந்திருப்போம்.

ஈற்றில் சின்ன மாமா சாட்சியம் சொல்ல சாட்சிக் கூண்டில் ஏறினார். அவரது சாட்சியத்தை முதலில் அவரது வழக்கறிஞர் நெறிப்படுத்தினார். பின்னர் எதிரி தரப்பு வழக்கறிஞர் சின்ன மாமாவைக் குறுக்கு விசாரணை செய்யத் தொடங்கினார். பெரிய மாமா பெரும் பதற்றத்துடன் காணப்பட்டார். ஏனென்றால் எதிரி தரப்புச் சட்டத் தரனி வெறும் சாதாரணர் அல்லர். கம்பனிச் சட்டத்தில் பிரபல்யம் வாய்ந்த சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. சேதுகாவலர். இதுவே பெரிய மாமாவின் பதற்றத்திற்கு காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர் தரப்பு வழக்கறிஞர் சேதுகாவலர் புலமைமிக்க ஆங்கிலத்தில் பொடி வைத்து விடுத்த கேள்விக் கணைகளுக்குச் சின்னமாமா பதற்றம் எதுவும் இன்றி ஆங்கிலத்தில் சரளமாகச் சுடச்சுடப் பதில் அளித்தார். பெரிய மாமாவின் முகத்தில் மெல்ல மெல்ல நிம்மதி தோன்றியது. போகப் போகத் தம்பியாரின் திறமை கண்டு புன்னகை பூத்தார். சின்ன மாமா சாட்சிக்கூண்டில் இருந்து எதுவித பரபரப்புமின்றி சர்வசாதாரணமாக தனது இருக்கைக்கு நிதானத்துடன் வந்தார். நீதிமன்றம் கலைந்ததும், மனச்சாட்சி உறுத்தியதாலோ என்னவோ எதிரி தரப்பு வழக்கறிஞர் சேதுகாவலர் சின்னமாமாவை நோக்கி வந்து 'நீர் ஒரு உண்மை பேசும் சாட்சி' (You are a truthful witness) என்று பாராட்டினர். எதிரிதரப்பு வழக்கறிஞர் முறைப்பாட்டுக்காரர் ஒருவரை இப்படிப் பாராட்டியதை நீதிமன்ற நிருபராக நீண்ட காலம் பணியாற்றும் நான் இதுவரை கண்டதுமில்லை கேட்டதுமில்லை.

இவர் ஒரு சாயிபக்தர் வெறும் கண்மூடித்தனமான பக்தி அல்ல அது. தெளிவாக சாயி சிந்தனைகளை வாசித்து அறிந்தவர். அதனால் அவருக்கு சாயி பகவான் மீது அசைக்க முடியாத நம்பிக்கை. சஞ்சீவி பத்திரிகையின் பொறுப்பாசிரியராக இருந்த போதும் பின்னர் சந்நிதி இதழ் ஆசிரியரானதும் நான் சின்ன மாமாவிடம் கேட்டு சாயி பற்றிப் பல கட்டுரைகளைப் பெற்று அப்பத்திரிகைகளில் வெளியிட்டேன்.

எனது அன்புத் தொல்லை காரணமாக அவர் படைத்த அற்புதமான கட்டுரைகளை 'சாயிபாபா சாயிநாதா' என்ற நூலாக சிவகாமி அம்பாள் பப்ளிகேஷன்ஸ் பாபாவின் ஜனன தினத்தில் வெளியிட்டுள்ளது.

சங்குவேலியில் எமது இல்லத்தில் எழுந்து நடமாட முடியாத நிலையில் நோயுற்றிருந்தார் மாமி ஆங்கிலேய வைத்திய நிபுணர்கள் இவர் உடல் தேற மாட்டார் என்ற கருத்தினை வெளியிட்டிருந்தனர். இப்படியான சூழ்நிலையில் மாமியை மாமா இந்தியாவுக்கு அழைத்துச் சென்றார். அங்கு வைத்தியம் செய்வதுடன் நிற்காது சாயிபாபாவிடம் சென்றார்.

ஒரு கடிதத்தில் மாமியின் சுகவீனத்தை வரைந்தார். விடிவு தருமாறு பாபாவை வேண்டினார். இக்கடிதத்தை தனது சேட் பையில் வைத்துக் கொண்டு பாபாவின் தரிசனத்துக்கு காத்திருந்தார்.

என்னே அதிசயம்! பாபா இவர் அருகில் வந்து நின்றார். பாபாவைக் கண்ட மாமா அந்த அவதார புருஷரின் திருவடியில் கரைந்து போனார். கடிதத்தை மறந்து விட்டார். காளியைக் கண்டதும் தனது கோரிக்கையை மறந்த விவேகானந்தரின் நிலையில் இருந்தார். இந்த நிலையில் பாபா தமது பாதத்தினால் மாமாவின் காலினை மிதித்ததும் மாமா சுய உணர்வு பெற்றார். கடிதத்தை பாபாவினிடம் கொடுத்தார். மாமி சுகமுற்றார். எழுந்து நடக்கும் நிலையில் திரும்பவும் எமது சங்குவேலி இல்லம் திரும்பினார்.

நல்லவர்கள் மறையும் போது எமது அவல உணர்வுகள் தலை தூக்கும் 'சாவே உனக்கொருநாள் சாவு வந்து சேராதோ' என்று கண்ணதாசன் போன்று குமுறத் தோன்றும்.

எனினும் மரணம் துயில்வது, பிறப்பு துயில் நீங்குவது என்று நாம் தெளிவு பெற்று வாழ்க்கையின் நியதியினை உணர வேண்டும்

துயில்வது போலும் சாக்காடு துயின்று
விழிப்பது போலும் பிறப்பு - என்பார் திருவள்ளுவர்

வே. வரதசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CHELLIAH NADESAPILLAI



The passing away of C.Nadesapillai a very deep sorrow in my heart. I have said is to my family and friends that I was preivileged to have known this kind caring gentle human being.

My first contact with late Nadesapillai was when I was a Manager at Singer Sewing Machine Company. He joined the Company, having terminated his service from the Royal Navy, as a District Manager. He was later promoted as a Supervisor and then Area Manager. He was my Superior Oficer, but a strange and close bond developed since then. He remained a true friend even after his retirement from the Company.

I would like to recall an incident to illustrate the nature of Nadesapillai. I was nominated to attend an International Conference at the University in Denmark, and was also scheduled to visit Germany, Holland and Britain. The day before my departure, I borrowed Nadesapillai's A 30 Car to collect my Passport. On my return journey, at the Khan clock tower in Pettah, there was a huge Trailer in front with a large Container, A Lorry came from behind and smashed on to the car, sending it under the Trailer in front. The front portion of the Car was a wreck. I had not received my Driving licence at the time. As I was conscious that Nadesapillai was not a rich man and had a family with growing Children to support and also that he will not be able to attend to his duties covering a wide area in the Country, I gave him the money I had to purchase the Travellers Cheques, with the intention of concelling the trip.

He would nothing what I was saying, that if would take over a month for my return and even then I would have to collect the money. He simply said, "Thamby you go on the trip, it is not everyday that you get an opportunity like this. God is there, I will some how repair the car, we will see to the rest later".

In the Company there were Sinhalese, Tamils, Muslims and Burghers, very few of them will have a good word for work of the supervising officer. There was not one single employee who will ever say an unkind word about Nadesapillai. He treated every one with the same compassion and gentleness.

Nadesapillai, in his life, would have helped many who came in contact with him, but he would have never consciously hurt anyone. Once when I was walking with Nadesapillai, I noticed that he was moving a little away from the path.I asked him why he did that. He said there were some ants on the grass and if he trampled them and they died, to pay penance for that he will have to be born again.

Thinking of Nadesapillai and his life, I was reminded of what one beloved Tamil teacher Muthu Thamil Pulavar M.Nallathamby taught us at Zahira College.

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையில் மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி

M.M.Bahaudeen



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறைவா! நீ எங்கும் நிறைந்துள்ளாய்

-செ. நடேசபிள்ளை-

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன ஐம்பூதங்கள்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன ஐங்குணங்கள்.

நிலம் இந்த ஐந்து குணங்களையும் உடையது, அதனால் நிலமாகிய பூமியின் அசைவும் நிலையும் ஒரு வரையறைக்கு உட்பட்டவை.

குணங்களின் எண்ணிக்கை குறையக் குறைய பூதங்களின் அசைவும், நிலையும் வரையறைகளிலிருந்து விடுபடுகின்றன.

ஆகாயம் ஓசை என்னும் ஒரே ஒரு குணம் மட்டும் கொண்டது. அதனால் அது எங்குமுள்ளது.

இறைவன் குணம் இல்லாதவன் நிர்க்குணன்.

இதனால் இறைவன் எங்கும் வியாபித்துள்ளான்.

அவன் சர்வவியாபகி

இறைவன் எங்கும் நிறைந்துள்ளான்.

இப்பேருண்மையை மிக இலகுவாக விளக்குகிறார் பகவான் ஸ்ரீ சத்திய சாயி.

நன்றி : சந்நிதி


---

அமரர். செல்லையா நடேசபிள்ளை அவர்களின்
நினைவேட்டின் முகப்பு அட்டையில்
மாதுமை அம்பாள் சமேத கோணநாயகப் பெருமானின்
திருவுருவம் காணப்படுகிறது.

புகைப்படம்: திரு. நாகராசா கணபதிப்பிள்ளை

உதயன் பதிப்பகம், திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

24.10.2000 இல் சிவபதமடைந்த எம் தலைவனின் மரணச் சடங்கினை சிறப்புற நடாத்திய உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும், நோய்வாய்ப்பட்ட காலத்தில் அவரை அன்புடன் பராமரித்த "ஆசிரி" வைத்தியசாலை மருத்துவர்கள், தாதியருக் கும், மலர்வளையம், மலர்மாலைகள் மூலம் அஞ்சலி செலுத்திய வர்களுக்கும், தந்தி,தொலைபேசி, கடிதம் மூலம் எம் துயரைப் பகிர்ந்தோர்க்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்த அன்புள் ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

*பத்மாவதி நடேசபிள்ளை குடும்பத்தினர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடனும் பக்தியுடனும் யாரொருவர் எனக்கு ஓர் இலை, ஒரு மலர், ஒரு பழம் அல்லது தண்ணீரை சமர்ப்பிக்கிறார்களோ அந்தத் தூய்மையான, தன்னடக்கமுடையவருடைய அன்புக் காணிக்கையானது ஆர்வத்துடனும் தாமதமின்றியும் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

— பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



மயிலாப்பூர் ஷீரடி சாயிபாபா சந்நிதியில்

அமரர்

செ. நடேசபிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org